

S. Nadarajah
Pillai

விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

உங்கள் தேவைக்கான
சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.
கே. எம்.
அரிசிமீயாப்பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச்சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு, கொழும்பு.
Phone. 3411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை மீ 22உ ஞாயிற்றுக்கிழமை — Colombo, December, 7, 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 23 | இதழ் 186

உணவுக்கும் உடைக்கும் வெளிநாடுகளை எதிர்பார்ப்பது வெட்கக்கேடு

வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு விமோசனமில்லை

முன் யோசனையின்றி விதிக்கப்பட்ட இறக்குமதி வரிகளால் இருப்புச் சரக்குகள் மீது கொள்ளை லாபம்

ஸ்டெர்லிங் கடனை பிரிட்டன் கொடுக்காவிடில் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் முதலாளிகளின் சொத்துக்கள் சரிக்கட்டப்பட வேண்டும்

100 கோடி ரூபாய் ஸ்டெர்லிங் நிதியிலிருந்து 10மாதகாலத்தில்32கோடிரூபாய்உணவுக்குசெலவு

இலவசக் கல்விபற்றி வர்த்தக மந்திரியின் இடக்குப் பேச்சு

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் விவாதம்

கொழும்பு, டிச. 6

பாராளுமன்றக் கூட்டம் சபாநாயகர் தலைமையில் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பித்தது. சபையில் பட்ஜெட் விவாதம் நடைபெற்றது. பட்ஜெட் சபையில் சமர்ப்பிக்கப்படுமுன்னரே அதிகரிக்கப்பட்ட வரிகள் பற்றிய தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தனவென்று திரு தஹநாயகா கூறினார். நாட்டில் இப்போது வேலையில்லாப் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டுமென்றும், தேச மக்களின் வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதுடன் அரசாங்க உத்தியோகஸ்தர்ன் அதிகபட்ச சம்பளங்களைப்பற்றி குறிப்பிடப்படவேண்டுமென்றும் கைத்தொழில் அபிவிருத்தி, பஸ்போக்குவரத்தை தேசிய மயமாக்குதல், இலவசக் கல்வி, உணவு உற்பத்தி, பாராளுமற்ற அங்கத்தினர் சம்பளம் அலவன்ஸ்கள் குறைப்பது முதலியவைபற்றியும் திரு தஹநாயகா பேசினார்.

திரு சுந்தரலிங்கம் பேசுகையில் வாழ்க்கைச் செலவு குறைந்து வருவதாகவும் ஸ்டெர்லிங் பாக்கிகள் 100கோடிரூபாய் என்றும் இவற்றை இறக்குமதிப் பொருள்களின் செலவுக்கு உபயோகிப்பதாகவும் பிரிட்டனில் மட்டும் 70 கோடி ரூபாய் ஸ்டெர்லிங் பாக்கிகள் இருப்பதாகவும் பத்து மாத காலத்தில் உணவுப் பொருள்களுக்கு சுமார் 32 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் கூறினர். இலவசக் கல்விபற்றி பேசுகையில் அதற்கு கண்டனக்காரர்கள் பலவிதமாகவும் வியாக்கியானம் செய்வதாக கூறினர்.

ஸ்டெர்லிங பாக்கிகள் பற்றி திரு. பீட்டர் கெனமன் குறிப்பிடுகையில் பிரிட்டன், இலஙகையின் பாக்கிகளைக் கொடுக்காது விடின் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் முதலாளிகளின் சொத்துக்களை அவற்றுக்கு எடுத்துக்கொள்ள ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்றும் நடுத்தர வகுப்பினர்களதும் ஏழைகளதும் கஷ்டங்களை நீக்க அரசாங்கம் பாடுபட வேண்டுமென்றும் கூறினர்.

பாராளுமன்றக் கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப். மொலமுரே தலைமையில் நடைபெற்றது.

பாராளுமன்ற திறப்புவிழா தினத்தன்று (நவ. 25) கவர்னர் நிகழ்த்திய பிரசங்கத்தின் மீது நிறைவேற்றப்பட்ட நன்றி பாராட்டுந் தீர்மானத்துக்கு கவர்னர் தமது நன்றியைக் கடித மூலம் தெரிவித்திருந்தார் அக்கடிதம் சபாநாயகரால் சபையில் படித்துக் காண்பிக்கப்பட்டது.

இதன் பின் 1947-48 வருட பட்ஜெட் (வரவு செலவுத் திட்டம்) விவாதம் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. திரு. டபிள்யூ. தஹநாயகா விவாதத்தை ஆரம்பித்தார். அவர் பேசியதாவது:-

ஜவுளி உற்பத்தி

வரவு செலவுத் திட்டத்தில் புதிய அபிவிருத்தி வேலைகளுக்கு இடம் வகுக்கப்படவில்லை. ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டால் வேலையில்லாதிருக்கும் சுமார் 10,000 பேர்களுக்கு வேலை கொடுக்கக்கூடியதாக இருக்கும். இலங்கைக்கு 750 லட்சம் யார் ஜவுளி தேவை இதில் 40 சத விகிதம் இலங்கையிலேயே உற்பத்தி செய்ய முடியுமானால் வேலையில்லாதிருக்கும் சுமார் 10,000 தொழிலாளருக்கு வேலையும் கொடுப்பதாக இருக்கும்.

சமூகசேவை கமிஷன் சிபார்சுகள்

சமூகசேவை கமிஷன் சிபார்சு செய்த விஷயங்கள் பலவும் இப்பொழுது அமுல் நடத்தப்படவில்லை. பள்ளிக்கூடப் செல்லும் பிள்ளைகளுக்கு அலவன்ஸ கொடுக்க வேண்டுமென சமூகசேவைக் கமிஷன் சிபார்சு செய்திருந்தது. இந்த சிபார்சை அமுல் நடத்தவில்லை. பட்ஜெட்டை பரிசீலனை செய்து பார்த்தால் அநாவசியமான செலவுகளும் இருப்பதாக தெரியவருகிறது. மூன்று கட்டிடங்களை திருத்தியமைப்பதில் - செனட் சபை கட்டிடம், பிரதிநிதிகள் சபை, பிரதமர் இல்லம் - சுமார் 10 லட்சம் ரூபாய்வரை செலவிடப்பட்டுள்ளது.

புதிய மந்திரி இலாகா

புதிய அரசியல் திட்டத்தின் கீழ் பல மந்திரிகளையும் பாராளுமன்ற காரியதரிசிகளும் நிரந்தரக் காரியதரிசிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தபால் தந்தி இலாகா, முன் போக்குவரத்து மந்திரியின் கீழ் இருந்தது. இப்பொழுது ஒரு புதிய மந்திரி இலாகாவை ஏற்படுத்தி இரண்டு இலாகாவையும் நிர்வகிப்பதற்கு பல காரியதரிசிகளையும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த வரிகள்

இப்பொழுது பொருள்களின் வரிகள் அதிகரிக்கப்பட்டதால் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. புதிய வரிகள் சம்பந்தமான தகவல்கள் பட்ஜெட் சமர்ப்பணத்துக்கு முன்னரே வெளிவந்து பொருள்களின் விலைகள் சடுதியில் உயர்த்தப்பட்டுவிட்டன. இவ்விதம் தகவல்கள் முன்னதாகவே தெரிய வந்ததால் பொருள்கள் விலை அதிகரித்துள்ளன இவற்றை மிக நுணுக்கமாக விசாரிக்கப்படவேண்டும். கஷ்டப்படும் ஏழை மக்கள் நலன்களுக்காக இவற்றைப் பற்றி விசாரணை நடத்துவது அவசியம்.

நிதி மந்திரி:- அதிகரிக்கப்பட்ட வரிகள் சம்பந்தமான அறிக்கைகள் ஏற்கெனவே ஏதும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளனவா?

சபாநாயகர்:-(நிதி மந்திரிக்கு) அதிகரிக்கப்பட்ட சில வரிகள் சம்பந்தமான தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன என்று காலி அங்கத்தவர் கூறியுள்ளார்.

இதன்பின் சபாநாயகர் திரு தஹநாயகாவிடம் திரும்பி இவ்விபரங்கள் வெளிவந்த பத்திரிகையை சமர்ப்பிக்க முடியுமா என்று கேட்டார். தாம் சமர்ப்பிக்க முடியும் என்று திரு தஹநாயகா தெரிவித்துவிட்டு இவ்விஷயம் தேசம் முழுமையும் தெரிந்ததேயென்று கூறினர். நிதி மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்தன இடையிட்டு, திரு தஹநாயகா பத்திரிகையில் வெளிவந்த செய்தியை சபையில் சமர்ப்பிக்கும்வரை இவ்விதம் பேசப்படாதென்றும் இதனை வாபஸ்பெற வேண்டுமென்றும் கூறினர். திரு தஹநாயகா தொடர்ந்து பேசியதாவது:-

பொருள்கள் இருப்பு எடுக்கப்பட்டதா?

நிதி மந்திரி பாராளுமன்றத்திலே பட்ஜெட்பற்றி பேச்சு நிகழ்த்தியபோது மார்க்கெட்டுகளில் இருந்த பொருள்கள் பற்றிய இருப்பு எடுக்க முயற்சிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன். பொருள்களின் விலைகளை அதிகரிப்பதற்கு எந்த வர்த்தகருக்கும் முடிந்திருக்கும்.

9 வருடங்களுக்குப் போதிய குடிவகை

இங்குள்ள ஒரு வர்த்தகர் தம்மிடம் 9 வருடங்களுக்குப் போதிய குடிவகைகளை இருப்பில வைத்திருந்துள்ளார். நிதி மந்திரியின் பட்ஜெட் தீர்மானத்தைப்பற்றி அறிந்ததும் வர்த்தகர் தமக்கு பெரும் அதிர்ஷ்டம் வந்துள்ளதாக நினைத்தார். மந்திரி சபை கொள்ளை லாபம் அடிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காது விட்டால் அது அவர்கள் பகுதியில் மன்னிக்கமுடியாத பெரும் செயலாக இருக்கும்.

இலங்கையில் எங்கும் இலவசக் கல்வியைப்பற்றி பேசிக்கொள்ளப்படுகிறது. இலவசக் கல்வி மிகவும் முக்கியமானதென எல்லா மக்களும் தீர்மானித்தனர். ஆனால் இந்த இலவசக் கல்வியைப் பரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மந்திரி சபை எடுக்கவில்லை. தேச மக்கள் இலவசக் கல்வியின் பயன்களை அனுபவிக்கக்கூடிய முறையில் நடவடிக்கையை மந்திரி சபை எடுக்கவில்லை.

இலவச உணவு

இப்பொழுது அரசாங்கத்தால் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவச உணவு அளிக்கப்படுகிறது. கொழும்பில் ஒரு பிள்ளைக்கு 10 சத வீதமும் வெளி இடங்களிலுள்ள பிள்ளைகளுக்கு 8 சத வீதமும் அரசாங்கம் கொடுக்கிறது. இலவச உணவுக்கு அளிக்கப்படும் மான்யம் அதிகரிக்கப்படவேண்டும். இப்பொழுது தேசத்திலே சுமார் 300,000 குழந்தைகள் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க வேண்டியவர்களாக இருந்தும் அவர்களுக்கு எவ்விதமான கல்வி வசதியும் அளிக்கப்படவில்லை இவர்களுக்கு குறைந்தது ஆரம்பக் கல்வியாவது அளிக்கப்படவேண்டும். குழந்தைகளுக்கு இன்சூரன்ஸ் வசதிகள் ஏற்படுத்தவேண்டும். இலவசக் கல்வியை நாட்டில் பரப்பும் திட்டத்தை மிஷனரிமாரின் கையிலே அரசாங்கம் விடுவதுதான் நோக்கமா என அறிய விரும்புகிறேன்.

உணவுப்பொருள் நிலை

தேசத்திலே கட்டாயமாக விலைக்கு நெல் வாங்கும் திட்டத்தைக் கைவிட்டால் தேசத்தின் உணவு நிலைமை அபிவிருத்தியடையும். இப்பொழுது அரசாங்கம் கட்டாயப்படுத்தி வாங்கும் நெல்லுக்குக் கொடுக்கும் பணம் மிகவும் குறைவாக இருப்பதால் உற்பத்தியிலீடுபட்டுள்ள விவசாயிகள் அவற்றை கள்ள மார்க்கெட்டுகளில் விற்க முயற்சிக்கின்றனர். நெல் உற்பத்தியாளருக்கு அதிகவிலையை அரசாங்கம் கொடுத்தே நெல்லை வாங்கவேண்டும்.

கைத்தொழில் மயமாக்க வேண்டும்

தேசத்திலே வேலையில்லாக கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன. இவற்றை நீக்குவதற்கு முதலாளித்துவ அரசாங்கங்களில் ஒன்றான இலங்கையும் தேசத்தை கைத்தொழில் மயமாக்கவேண்டும்.

மீன்பிடி கைத்தொழில் இலாகா வேலைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். மீன்பிடியாளருக்கு மீன்களை ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு கொண்டுசெல்லும் வசதிகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை மீன் இறக்குமதியில் அரசாங்கம் அதிகம் செலவிடுகிறது

அதிகபட்ச சம்பளம்

அரசாங்க சேவைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக்குப் போதியபடி சம்பளம் அளிக்கப்படவேண்டும். சிப்பந்திகளுக்கு குறைந்தளவு வாழ்க்கைச் செலவை பாகுதல் சரி செய்யக் கூடியதாக சம்பளம் அளிக்கப்படுவது பற்றி ஆலோசிக்கப்படவேண்டியது அவசியம்.

அதிகபட்சமான சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டியது அவசியம். இந்த எல்லைக்கு மேல் ஒருவருக்கும் ஒரு சதந்தானும் கூட்டிக் கொடுக்கப்படாது. இன்று, வருடத்தில் ரூ 30,000 சம்பளமாக எடுப்பவர்களும் இருக்கிறார்கள். வருடத்தில் ரூ. 300 எடுப்பவர்களும இருக்கிறார்கள். இது நீதிமுறையற்ற செயலாகும்.

பாராளுமன்றக் காரியதரிசிகளுக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது. தேச சேவைக்காக தம்மை அர்ப்பணம் செய்ய வந்துள்ளவர்கள் இத்தகைய முறையில் அதிக சம்பளம் வாங்காது வேலை செய்யலாம். பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் மாத வீத அலவன்ஸில் ரூ 100 குறைக்கப்பட வேண்டும். மந்திரிமாரின் படிச்செலவுகள் ரூ 500ல் இருந்து குறைக்கப்பட வேண்டுமென மந்திரிமாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்தல ஸ்தாபனங்களுடன் நிதி சம்பந்தமான தொடர்புகளை மத்திய அரசாங்கம் ஸ்தாபித்துக்கொள்ள நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. எதுவிதமான சமரஸங்களும் இரு பகுதிகளுக்குமிடையில் செய்யப்படவில்லை. தேசத்தின் அரசாங்கம் நன்கு நடப்பதற்கு இரு பகுதிகளுக்குமிடையில் அவசியம் சமரஸமான தொடர்பு ஏற்பட்டேயாக வேண்டும். இல்லாது விடின் ஸ்தல ஸ்தாபனங்கள் பின்னடைய வேண்டி வந்துவிடும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருமான அதிகரிப்புக்கு மேலதிகமான வசதிகளை மத்திய அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். இங்கு வரிகள் மூலமே ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருமானங்கள் கிடைக்கின்றன உலகின் பல பாகங்களிலும் வேறு பல வழிகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருமானங்கள் கிடைக்கின்றன.

ஸ்தலஸ்தாபனங்களால் சினிமாக்கள் நடத்தப்படுவதை ஸ்தலஸ்தாபன மந்திரி ஏன் அனுமதிக்கப்படாது? கல்வி சம்பந்தப்பட்ட வரையில் இது மிக முக்கியமாகும்.

பஸ போக்கு வரத்து தேசீய மயமாக்க வேண்டும்

முனிஸிபல் சபைகளின் பகுதிகளில் உள்ள பஸ போக்குவரத்தை முனிஸிபல் மயமாக்க வேண்டும். கொழும்பு, காலி முனிசிபல் சபைகள் தங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள பஸ் போக்குவரத்துகளை முனிசிபல் மயமாக்க கேட்டுள்ளன. இது அளவுக்கதிகமானதோவென்று மந்திரியைக் கேட்க விரும்புகிறேன்.

போக்குவரத்து மந்திரியின் திறமையீனம்

சபையிலுள்ள அங்கத்தினரில் பெரும்பாலானோர் பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்குவதை தாம் ஆதரிப்பதாக தேர்தல் நேரத்தில் தெரிவித்துள்ளனர். பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டபோது ஸதல ஸதாபன மந்திரி இலங்கை ரயில்வேயைப் பற்றி பரிகசித்துக் கூறினர் ரயில்வே போக்குவரத்து ஒழுங்கீனமாக நிர்வகிக்கப்படுவதற்கு போக்கு வரத்து மந்திரியின் திறமையீனமே காரணம். ரயிலில் மூன்றாவது வகுப்பு வண்டிப் பிரயாணிகளின் சௌகரியத்துக்கு எதுவிதமான வேலைகளும் செய்யப்படவில்லை.

மராமத்து இலாகாவினால் அவசியம் செய்து முடிக்கப்பட வேண்டிய முக்கிய வேலைகள் அப்படியே இருக்கின்றன கல்வி மந்திரி ஒரு கட்டிடத்தை வருடக் கணக்கில் பெறமாட்டாது இருக்கிறார்.

வேலையில்லாதோர் பிரச்னை

வேலையில்லாது கஷ்டப்படுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இந்த

(4-ம் பக்கம் பார்க்க)

பிரான்ஸில் புரட்சி நடைபெறுகிறது!

ரயில்வே ஸ்டேஷன், தபால் ஆபீஸ, மின்சார நிலையங்களை தொழிலாளர் கைப்பற்றுகின்றனர்

புதிய அதிகாரம் பெற்ற மந்திரி சபையில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை அடக்க ஆலோசனை

பாரிஸ, டிச 5

பிரான்ஸ முழுவதும் கலகங்களும் நாசகரமான வேலைகளும் நடைபெறுகின்றன.

நேற்று முழுவதும் மார்செயில்ஸ நகரில் வேலை நிறுத்தம் செய்துவரும் தொழிலாளர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டனர். பாதுகாவல் படை போதாதென்று வெள்ளையரல்லாத பிரஞ்சு துருப்புகள் தருவிக்கப்பட்டன. பாரிசிலும் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் பலாத்காரச் செயல்களில் இறங்கினர். பாரிசிலுள்ள ஒரு மின்சாரநிலயத்தைத் தாக்கினர்

மார்செயில்ஸ நகரில் தொழிலாளர்கள் லொறிகளைக் கவிழ்த்து அவைகளை வேலியாக நிறுத்தி அவ்வேலிக்குப் பின்புறமாக நின்றுகொண்டு போலிசாரை எதிர்த்தனர். இதுசம்பந்தமாக 100 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். கடற்கரை ரஸதாவில் பாரிஸ நகரை நோக்கி நிற்கும் ஓர் குன்றினுச்சியை தகர்க்க தொழிலாளர்கள் 'டயனமைட்' வெடியை உபயோகித்தார்கள் போக்குவரத்தைக் தடுப்பதற்காக அவ்விதம் செய்தனர். லொறிகளையெல்லாம் தொழிலாளர்கள் மறித்து நிறுத்தியதால் உணவு விநியோகம் தடைப்பட்டது.

பாரிசுக்கு வெளியே யுள்ள கமியூனிஸட் கட்சிக்காரியதரிசி திரு. தோரஸ வீட்டிற்கு வெளிப்புறத்தில்நேற்றிரவு ஒரு வெடிகுண்டு வெடித்தது வீட்டின் பல ஜன்னல்கள் தவிடுபொடியாயின வீட்டுக்கு ஏராளமான சேதம் மேற்பட்டது உடனே போலிசார் விசாரணை நடத்தினார்கள். திரு. தோரஸ மாஸகோ நகர் சென்றுவிட்டு சில தினங்களுக்கு முன்புதான் பாரிஸ திரும்பினர். பாரிஸ-லில்லி எக்ஸபிரஸ ரயில் கவிழ்க்கப்பட்டது சம்பந்தமாக அவர் அபிப்பிராயம் தெரிவித்தபோது இச் சதியை கமியூனிஸட்டுகள் செய்தார்கள் என்று பழி சுமத்த அரசாங்கமே செய்திருக்கிறதென்றும் இச்சம்பவம் 1933 வது வருடம் பெர்லினில் ரீச்ஸடாக் கொளுத்தப்பட்ட சம்பவம்போன்றிருக்கிறதென்றும் கூறினர்.

இன்றிரவு பாரிஸ நகரில் இரு இடங்களில் கலகங்கள் நடைபெற்றன. ஓரிடத்தில் தொழிலாளர்கள் வெடிமருந்துக் குதத்தை தாக்க முயன்றபோது போலிசாரால் துரத்தப்பட்டனர்

செயின்ட்டுவெனில் 250 தொழிலாளர்கள் மின்சார நிலையத்தைத் தாக்க முயன்றபோது ஏற்பட்ட சச்சரவில் போலிசாருக்கும் தொழிலாளருக்கும் காயங்களேற்பட்டன.

நேற்று மத்திய பிரான்சில் தொழிலாளர்கள் ரயில்வே ஸடேஷன்களைக் கைப்பற்றினர். அதனுல் ரயில்களை வேறு பாதைகள் வழியாகச் செலுத்தும்படி நேரிட்டது.

சதிச் செயல்கள் புரிகிறவர்களுக்குக் கடுமையான தண்டனையும் அதிகமான அபராதம் விதிக்கும் புதிய சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரத்தைக்கொண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தத்தை எவ்விதம் சமாளிப்பதென்பது பற்றி பிரெஞ்சு மந்திரி சபை நேற்று கூடி ஆலோசனை செய்தது

உள்நாட்டு மந்திரி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்:-

கமியூனிஸ்டுகளான 5 ரயில்வே தொழிலாளர் கைது செய்யப்பட்டனர். திஙகட்கிழமை பாரிசில் ரயிலைக் கவிழ்க்க நடைபெற்ற சதி சம்பந்தமாக அவர்களிடமிருந்து சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

நைஸ் நகரில் தபாலாபீசைக் கைப்பற்ற முயன்ற தொழிலாளருக்கும் போலிசாருக்கும் நடைபெற்ற சச்சரவில், 20 பேர்கள் காயமடைந்தனர். கான்ஸ் நகரில் தொழிலாளர்கள் மத்திய தபாலாபீசைக் கைப்பற்றிவிட்டனர். தபால் போக்குவரத்து நின்றுவிட்டது. டெலிபோன் மட்டும் வேலை செய்கிறது.

மத்திய பிரான்சில் பாரிஸ்-ஜினிவா எக்ஸ்பிரஸ் ரயில் அம்பரியோ ஸ்டேஷனுக்கு வந்தபோது, தொழிலாளர்கள் எஞ்ஜினைக் கழற்றிவிட்டு நெருப்பை அணைத்தனர். அதனுல் மற்றொரு எஞ்ஜினை போர்க் நகரிலிருந்து கொண்டுவந்து பூட்டி போலிஸ் பாதுகாவலுடன் ரயில் புறப்பட்டது. இதனுல் 3 மணி நேரம் தாமதம் ஏற்பட்டது.

பாரிஸ-டூலுஸ ரயில் பாதையிலுள்ள ஸடேஷன்களை புரட்சிக்காரர்கள் கைப்பற்றியதால் ரயில்கள் வீர்கான் ஸ்டேஷனிலிருந்து வேறு பாதையில் செல்கின்றன. விமோகஸ் ஸ்டேஷனைக் கைப்பற்றியிருந்த தொழிலாளர்களைப் போலிசார் விரட்டினர். பிரைவ் என்ற முக்கியமான ரயில்வே ஜங்ஷன் வேலைநிறுத்தக்காரர் வசமிருக்கிறது.

டெனியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தைத் தாக்கியபோது தொழிலாளருக்கும் பாதுகாப்பு படைக்கும் ஏற்பட்ட சச்சரவில் 16 பாதுகாவல் படையினர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்கள்.

பாரிசுக்கு அருகிலுள்ள சால்ம்சன் மோட்டார் தொழிற்சாலையை புரட்சிக்காரர் தாக்கினர். காயமடைந்த பாதுகாவல் படையினர் ஒருவர் மாண்டார்.

நவம்பர் 24-ம் தேதியிட்ட லண்டன் தபால் நேற்றுதான் பாரிசுக்கு வந்து சேர்ந்தது.

அரசாங்க ஊழியரின் வேலை நிறுத்தம்

பாரிஸ், டிச. 5

அரசாங்க ஊழியர் சங்கத்தாரும் இன்று வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தனர்.

(ராய்ட்டர்)

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
164 ஏ, நட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து கார்த்திகை மீ 22உ
ஞாயிற்றுக்கிழமை

அழுவதா? சிரிப்பதா?

சோல்பரி அரசியலில் ஒரு மந்திரியின் செயலுக்கு மற்றும் ஏனைய மந்திரிகளும் பொறுப்புள்ளவர்களாவர். இந் நிபந்தனைக்கு ஒப்ப நேற்று முன் தினம் வர்த்தக மந்திரி திரு சுந்தரலிங்கம் நிதி மந்திரி திரு ஜயவர்த்தனுவின் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசியுள்ளார். திரு சுந்தரலிங்கம் வர்த்தக மந்திரி என்ற முறையில் தம் கடமையைச் செய்யத்தான் வேண்டும். ஆனால் இப்படிச் செய்யும்பொழுது உண்மைகளைத் திரித்துக் கூறுவதை எவரும் விரும்பமுடியாது. "இந் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது. அப்படி இருந்தாலும் கால்சட்டை போட்ட உத்தியோகம்தான் வேலை இல்லாதவர்கள் தேடுகிறார்கள்" என்று கூறியிருக்கிருர் திரு சுந்தரலிங்கம். இவருடைய இந்தப் பேச்சைக் கேட்டு நாம் அழுவதா? சிரிப்பதா?

இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையென்று ஒருவர் கூறினுல், அவர் இங்கு வாழவில்லையென்றுதான் நாம் கூறவேண்டும். திரு சுந்தரலிங்கத்தின் உளறுவாய்ப் பேச்சுக்களை இப்பத்திகளில் பல தடவைகளில் கண்டித்துள்ளோம். ஆனால் அவர் திருந்தியபாடில்லை. வெங்கலக் கடைக்குள் ஆனை புகுந்தால் கலாட்டாதான் அல்லாமல் வேறு ஒன்றும் கிடையாது. அதேபோன்று நடவாது, படித்த பெரியவர் தமது நாவை அடக்கவேண்டும். உண்மையில் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டு என்பதை அடுப்பங்கரையில் இருக்கும் பாட்டிகளும் அறிவர். ஆகவே வர்த்தக மந்திரி தேசத்திற்குத் தொண்டு செய்வதாயிருந்தால் முதலாவதாக இங்குள்ள நிலைமையை அறியவேண்டும். அறிந்த பின்தான் பரிகாரம் தேடவேண்டும். அவ்விஷயத்தையிட்டு அதிகாரபூர்வமாகப் பேசவும்வேண்டும்.

இன்னும் அதே பேச்சில் வெண்ணெய் உபயோகிப்பவர்கள் பணக்கார வர்க்கத்தினர்தான் என்றும் கூறுகிருர். திரு சுந்தரலிங்கம் தாம ஒரு முதலாளி வர்க்கத்தினர் என்று பகிரங்கமாகப் பிரதிநிதிகள் சபையில் செவிடுபடப் பேசியவர். முதலாளியாகிய அவர் நல்ல வேளையாகத் தானும் தனது குடும்பமும்தான் இலங்கையில் வெண்ணெய் உண்பவர்கள் என்று கூருமல் விட்டது சந்தோஷம்.

யுத்தத்திற்கு முன் ஏழை மக்கள் ஆஸதிரேலிய வெண்ணெயை அவ்வளவு கவனிப்பதில்லை. காரணம்? அவர்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோருகும். யுத்தகாலத்தில் உணவுக் கட்டுப்பாடு வந்தது. அவர்கள் காலத்திற்குத் தக்கவாறு கோதுமை மாப்பண்டங்களை ஆக்கி உண்டார்கள். கோதுமைப் பண்டங்களுக்கு வெண்ணெய் சேர்த்தே உண்ணப் பழகிக் கொண்டார்கள். இவ்வித அத்தியாவசிய உணவை வர்த்தக மந்திரி பணக்காரரின் உணவு என்று கூறுவது இங்குள்ள உணவு நிலைமையை அறிந்துள்ளார் என்று கூற முடியாது. அதுவுமல்லாமல் ஏழை மக்களின் நிலைமையை தானும் அறிந்தவர் என்று அவர் அறை கூவுவதையும் பொய்ப்படுத்துகின்றது. திரு சுந்தரலிங்கம் விளம்பரம் வேண்டிப் பேசாது உண்மை நிலைமையை அறிந்து பேசும்படி கேட்டுக் கொள்ளுகிருேம்.

இலங்கைக்கு 200 நிபுணர்கள்

கொழும்பு, டிச. 6

அடுத்த ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்குள் 200 உத்தியோகஸ்தர்களை வெளி நாடு அனுப்பி விசேஷ பயிற்சி அளிக்கவேண்டும் என்று வைத்திய இலாகா தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

ஆயுதச்சாலையை புரட்சிக்காரர் கைப்பற்றினர்

பிரஞ்சு குடியரசு தலைவருடன் தொழிலாளர் சங்கக்காரியதரிசிகள்பேட்டி

ரோமாபுரியிலும் அமளி

பாரிஸ், டிச. 6

பிரான்ஸ் முழுதும் 15 தினங்களாக நடைபெற்றுவரும் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஓயவில்லை. கலகங்களும், சதிச் செயல்களும், பலாத்காரமும் உயிர்ச்சேதங்களும், புரட்சிகளும் அதிகரித்து வருகின்றன. நாடு ஸ்தம்பித்து போக்குவரத்துகள் தடைப்பட்டு பொருளாதாரம் சீர்குலைந்துபோயிருக்கிறது.

மத்திய பிரான்ஸிலுள்ள செயின்ட் எடினி என்ற நகரில் புரட்சிக்காரர்கள் ஆயுதச் சாலையையும் ரயில்வே ஸ்டேஷனையும் கைப்பற்றிக்கொண்டனர். அவைகளை மீட்க பாரிஸிலிருந்து துருப்புகள் புறப்பட்டுச் சென்றிருக்கின்றன. அதே சமயத்தில் பிரஞ்சுக் குடியரசுத் தலைவரை கமியூனிஸ்ட் தொழிலாளர் சங்கக் காரியதரிசியும் மற்ற தொழிலாளர் சங்கக் காரியதரிசியும் சந்தித்துப் பேசினர். வேலை நிறுத்த எதிர்ப்புச் சட்டத்தை ரத்துசெய்யும்படி அவர்கள் கோரினுர்கள்.

எடினி நகருக்கு 1500 துருப்புகள் புறப்பட்டுச் சென்றிருக்கின்றன.

தெற்கு பிரான்ஸில் வாலன்ஸ் நகரில் போலிஸார்-தொழிலாளர் சச்சரவு நடந்தது. போலிஸாரும் துருப்பும் ஜனங்களைச் சுட்டன. லில்லி நகர் செல்லும் ரயிலை புரட்சிக்காரர் நிறுத்தித் தடுத்துவிட்டனர்.

ரோமாபுரியிலும் அமளி

ரோம், டிச. 6

ரோமாபுரியில் ஆர்ப்பாட்டம் செய்த வேலையில்லாத் திண்டாட்ட கூட்டத்தின்மீது போலிஸார் நேற்றிரவு சுட்டனர். மூவர் காயமடைந்தனர். ஜனங்கள் போலிஸாரை இரும்புத் தடியாலும் கற்களாலும் தாக்கினர். அதிகப்படியான போலிஸ் படை தருவிக்கப்பட்டது. (ராய்ட்டர்)

பெண் கொலை வழக்கு

கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்

கொழும்பு, டிச. 6

தில்லுல்லாவில் டேவித ஹாமி என்பவர் நோனுஹாமி என்னும் ஓர் பெண்ணைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். பிரஸதாப நோனுஹாமி பொடி அப்புஹாமி என்பவருடைய மனைவியென்று தெரிகிறது. (ந-நி)

திவுலப்பிட்டியாவில் களவு

கொழும்பு, டிச. 6

திவுலப்பிட்டியாவில் உள்ள ஓர் வீட்டில் இருந்து ரூ. 3872 51 களவாடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. கள்வன் யார் என்பது இதுவரை தெரியவில்லை. கள்வர்கள் பின் வாசல்கதவைத் திறந்தே உள்ளே புகுந்துள்ளார்கள். [ந-நி]

தொழிற் கட்சி தோல்வி

எப்சம், சரே, டிச. 5

எப்சம் பகுதிக்குப் பாராளுமன்ற உப தேர்தலில் போட்டியிட்ட மூவரில் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த மக்கோகொடேல் என்பவர் தொழிற் கட்சியைச்சேர்ந்த பிஷப் என்பவரை 16,294 வோட்டுகளால் தோற்கடித்தார். (ராய்ட்டர்)

பாரசீக மந்திரி சபை நெருக்கடி

டெஹ்ரான், டிச. 5

பாரசீக மந்திரி சபையில் மூன்று முக்கியமான மந்திரிகள் ராஜிநாமா செய்துவிட்டனர். தான் ராஜிநாமா செய்யவில்லையென்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேறினுலொழிய தான் ராஜிநாமா செய்யப்போவதில்லையென்றும் பிரதம மந்திரி கவாம் ஸல்டானு தெரிவித்தார். அவரை நீக்கும்படி எதிர்க்கட்சியார் மன்னருக்கு மனுச்செய்திருக்கிருர்கள். (ராய்ட்டர்)

கடல் கடந்த இந்தியர் நிலைமை

இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்கள்

மோட்டார் தொழிற்சாலை, கப்பல் பயிற்சி, போர் விமானம் அதிகரிப்பு

புதுடில்லி, டிச. 5

பம்பாயில் இரு மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலைகளும் கல்கத்தாவில் ஒரு தொழிற்சாலையும் நிறுவப்பட்டு வருகின்றன. இவைகள் வருடத்திற்கு 20,000 மோட்டார்களை உற்பத்தி செய்யும். அடுத்த மூன்று வருடங்களில் தொழிற்சாலை யந்திரங்கள் சேகரிக்கப்படும். 1950 அல்லது 51-ல் மோட்டார்காருக்குத் தேவையான உறுப்புகளை அத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும்.

வர்த்தக கப்பல் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் கேடட் கப்பல் "அழிசேத்து" 3-ந் தேதியன்று பம்பாய் துறைமுகத்தில் கடலில் விடப்பட்டது.

வியாபாரக் கப்பல் போக்குவரத்துக்கு வேண்டிய ஆட்களுக்கு பயிற்சி அளிக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும், இந்தியக் கப்பல் பயிற்சிக் கழகத்திற்கு சர்க்கார் உதவி அளிக்கவும், கப்பல் எஞ்சினியரில் பட்டங்கள் பெற அதிகப் பயிற்சி வசதிகள் அளிக்கவும் பரிசீலனை செய்ய இந்திய சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிருர்கள்.

இந்திய சர்க்கார் லண்டனில் வேட்டை விமானங்கள் வாங்கி வருவதாகத் தெரியவருகிறது. பிரிட்டிஷ் விமானப் படை போதகர்கள் மூலம் இந்திய ராணுவ விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

ராமபாதசாகர் திட்டத்திற்கு 125 முதல் 135 கோடி ரூபாய் வரை செலவாகுமென்றும் அதைக் கட்டி முடிக்க 7 முதல் 10 வருடங்களாகுமென்றும் இதற்கு வெளிநாடுகளிலிருந்து கூட எஞ்சினியர்கள் முதலியோர் தருவிக்கப்படுவார்கள் என்றும் இந்திய பாராளுமன்றத்தில் பண்டித நேரு அறிவித்தார்.

இந்தோ-சைனு மகாநாடு

கலந்துகொள்ள மாஜி அன்னும் மன்னர் மறுப்பு

பாரிஸ், டிச. 5

இந்தோ-சைனுவின் எதிர்கால நிலைபற்றி டாலட்டில் நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொள்ள மாஜி அன்னும் மன்னர் மறுத்துவிட்டார்.

இம் மகாநாட்டில் இந்தோ-சைனுவிலுள்ள வியட்நாம் குடியரசைத் தவிர மற்ற கொச்சின் சைனு, டொங்கிங், அன்னும் ஆகிய பிரதேசங்களின் பிரதிநிதிகள் கூடுகிருர்கள். இந்தோ-சைனுவின் எதிர்காலத்தைப் பற்றி நேர்மையான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கும் மகாநாட்டில்தான் கலந்துகொள்ள முடியும் என்று அன்னும் மாஜி மன்னர் பாவோடாய் தெரிவித்துவிட்டார்.

பிரெஞ்சு ராணுவத்திற்கு விரோதமான செய்திகளைப் பிரசுரித்ததாக இந்தோ-சைனுவில் பிரெஞ்சு சர்க்கார் 4 சீனப் பத்திரிகைகளைத் தடைசெய்துவிட்டனர். [ராய்ட்டர்]

ஹாவனு மகாநாடு

ஹாவனு, டிச. 6

இங்கு நடைபெறும் 62 நாடுகளின் உலக வர்த்தக மகாநாட்டில், இந்தியா பிரதிநிதி அதர்காரும் பர்மா பிரதிநிதி உ கின்னும், உலக வர்த்தக ஸ்தாபனமானது வெறும் ஆலோசனை கூறும் ஸதாபனமாக இருக்கலாகாதென்றும், பொருளாதாரத்தில் பிற்போக்காக இருக்கும் நாடுகளில் முற்போக்கு நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தீர்மானம் கொண்டு வந்தனர். இது உலக வர்த்தக சாசனத்திற்கு முரண்பாடு என்று கூறி அமெரிக்கா இத்தீர்மானத்தை ஆட்சேபித்தது. ஆஸ திரேலியா இத்தீர்மானத்தை ஆதரித்தது. (ராய்ட்டர்)

இந்திய பாராளுமன்றத்தில் பண்டித நேரு விளக்கம்

இலங்கை சுதந்திரம் பற்றி காந்திஜி

இந்தியாவுடன் உறவு ஏற்படுத்த பர்மா பிரதம மந்திரி ஆவல்

ஆசியாவுக்கு விமோசனமளிப்பது இந்தியாதான் என்கிருர் இந்தோனேஷிய மாஜி பிரதமர்

புதுடில்லி, டிச. 5

இந்தியாவிலிருந்து சென்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் குடியேறி யுள்ள கடல் கடந்த இந்தியர் பற்றி நேற்று இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால நேரு இந்தியா பாராளுமன்றத்தில் இந்தியாவின் அந்நியநாட்டுக் கொள்கை விளக்கப்பேச்சில் பின்வருமாறு கூறினுர்:-

இவ்விஷயம் மிகப் பழைமையானதும் மனதுக்கு வருத்தத்தைக் கொடுக்கக் கூடியதுமான விஷயமாகும். கடல்கடந்த இந்தியர் சம்பந்தமாக நாம் எவ்விதமான உருப்படியான வேலையும் செய்யவில்லையென்று நம் மீது தெரிவிக்கும் புகார்கள் அனைத்தும் உண்மைதான் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். கானடாவிலும் மற்றும் சில இடங்களிலும் உள்ள இந்தியர்கள் சம்பந்தமாக நாம் ஒரு சில நன்மைகள் மட்டுமே செய்திருக்கிருேம். ஆனுல் உருப்படியான நன்மைகள் எதுவுமே செய்யவில்லை. இப்பிரச்னை சம்பந்தமாக உள்ளசங்கடமென்னவெனில் இது நாளுக்கு நாள் தீர்க்கப்படுவதற்கு மிகவும் சிக்கலாகவும் கஷ்டமாகவும் ஆகிக் கொண்டு வருவதேயாகும்.

இந்தியர்கள் இந்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் வியாபாரிகளாகவும், கைத்தொழிலாளர்களர்களாகவும், தொழிலாளர்களாகவும், ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும் சென்று குடியேறியுள்ளனர். இந்த இந்தியர்கள் சுதந்திரமில்லாத ஒரு நாட்டிலிருந்து பல இன்னல்களுக்கிடையே தைரியமாகச் சென்று தாஙகள் குடியேறியுள்ள நாடுகளில் ஓயாது உழைத்து அந்நாடுகளின் வளத்தையும் செல்வத்தையும் பெருக்கியிருக்கின்றனர். இந்தியாவின் இவ்விதமான குடியேற்ற சரித்திரம் இந்திய மக்களால் அயல்நாடுகள் அடைந்துள்ள செழிப்பையும் இந்தியமக்களின் தியாகத்தையும் எடுத்துக்காட்டும் ருசிகரமான அற்புத சரித்திரமாகும். ஆனுல் பல இன்னல்களுக்குமிடையே சென்று குடியேறிய இந்தியர்கள் தாங்கள் குடியேறிய நாடுகளை எவ்விதம் வளமுறச் செய்திருக்கிருர்கள் எனபதை எவராலும் மறுக்கமுடியாது. அந்நிய நாடுகளுக்கு இவ்விதம் இந்திய மக்கள் செய்துள்ள சேவை இந்தியா பெருமைப் படக்கூடியதொன்ருகும். (கரகோஷம்)

இந்தியாவுக்குத்தேவையான பொருட்களும் வளஙகளும் இந்தியாவிலே மலிந்திருக்கின்றன வென்பது உண்மையே. ஆனுல் அப்படி இருந்தும் அது தன்னை வெளிநாடுகளில் விஸ்தரித்துக் கொள்ள ஆரம்பிக்கும்போது, இந்தியாவின் பக்கத்து நாடுகள் பீதியுறுகின்றன. சைனுவைக் கண்டு அதன் பக்கத்து நாடுகள் பீதியுறுவது போல இந்தியாவைக் கண்டும் அதன் அக்கம் பக்கத்து நாடுகள் பீதியுறுகின்றன. நாம் ஜனத்தொகையில் பெருக்க முடையவர்களாக இருப்பதாலும், அக்கம்பக்கத்து நாடுகளிலும் நாம் அவைகளின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்திருப்பதாலும் அந்நாடுகளில் இந்தியா விஸ்தாரமடைவது இயற்கையானசம்பவமேயாகும். ஆனுல் நமது நியாயமான கோரிக்கை அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களது நலங்களைப் பாதுகாப்பது நமது கடமை என்றபோதிலும், அந்நாடுகளைச் சுரண்டிவரும் இந்திய முதலாளிகளின் நலன்களை நாம் பாதுகாக்க முடியாது. என்ருலும் அயல் நாடுகளிலுள்ள இந்தியர்கள நியாயமான உரிமைகள் அனைத்தையும் பாதுகாக்க நாம் கடமைப்பட்டிருக்கிருேம்.

இந்தியா-பர்மா உறவு

இன்று பாராளுமன்றத்தில் பண்டித நேரு பின்வருமாறு தெரிவித்தார்:-

பர்மா பிரதமருடன் அந்நிய நாட்டு மந்திரியுடனும் நாங்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசினுேம். எதிர்கால சம்பாஷணைக்கு அடிகோலியிருக்கிருேம்.

இன்று பர்மா பிரதம மந்திரி தக்கின் நு அகில இந்திய ரேடியோவில் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:- இன்னும் சில வாரங்களில் பர்மா சுதந்திரம் அடைகிறது. இப் புதிய சகாப்தத்தில் நாங்கள் இந்தியாவின் நேசபான்மையையும் உறவையும் நாடுகிருேம். ஆசியாவின் நலனை உயர்த்துவதற்கு நாஙகள் இந்தியாவையே நம்பிக்கொண்டிருக்கிருேம்.

ஐரோப்பிய வர்த்தக சங்கத்தில் நேருஜி பேசுவார்

கல்கத்தா, டிச. 5

டிசம்பர் 15-ம் தேதி நடைபெறும் அகில இந்தியாவிலுள்ள ஐரோப்பிய வர்த்தகர் சம்மேளனத்தின் வருடாந்தர பொதுக் கூட்டத்தில் இந்தியா பிரதமர் பண்டித நேரு பேசுவார். இதுவரை இக்கூட்டத்தில் இந்தியாவின் வைஸ்ராய் பேசுவது வழக்கம்.

பர்மா இலங்கை சுதந்திரம் பற்றி காந்திஜி

புதுடில்லி, டிச. 5

நேற்று பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா காந்தி பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியா ரத்தம் சிந்தாது சுதந்திரம் பெற்றது. அதை ரத்தம் சிந்தாமலேயே பாதுகாக்க வேண்டும். இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததன் பயனுல்தான் பர்மாவும் இலங்கையும் இவ்வளவு சீக்கிரம் சுதந்திரம் அடைய முடிந்தது. இந்தியா அஹிம்சா சக்தியைப் பலப்படுத்த வேண்டும்.

இந்தோனேஷியா பிரதிநிதி வேண்டுகோள்

ரங்கூன், டிச. 5

இந்தோனேஷியா மாஜி பிரதமர் ஜாவா செல்லும் வழியில் இவது பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

ஆசியா விமோசன மடைய இந்தியாவையே ஆசிய நாடுகள் எதிர்ப்பார்க்கின்றன. இந்தியாவில் நடைபெறும் தகராறுகள் கூடிய சீக்கிரம் முடிவுறும் என்று நம்புகிறேன். காந்திஜிக்கும் நேருஜிக்கும் இந்திய வாலிபர்கள் பரிபூரண ஆதரவளிக்க வேண்டும்.

பிரஞ்சு ஸ்தானிகர்

பாரிஸ், டிச. 5

இந்தியாவில் பிரஞ்சு ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட திரு லெவி நியூல் இன்று புதுடில்லிக்கு பயணமானுர்.

ஆப்கானிஸ்தானத்தில் இப்பி பக்கிரி

பெஷாவர், டிச. 5

இப்பிபக்கிரி இரண்டு வாரகாலமாக சுற்றுப் பிரயாணம் செய்தார். பட்டாணிஸ்தான் ஏற்படுத்துவது சம்பந்தமாக அவர் ஆப்கன் சர்க்கார் அதிகாரிகளுடன் கலந்து பேசியதாகத் தெரிகிறது.

காபூலுக்கு கர்னல் ஹுசைன் பயணம்

பாட்டியாலா, டிச. 5

பாட்டியாலா சமஸ்தான அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது:-

சமஸ்தான அதிகாரியாக இருந்த கர்னல் ஹுஸைன் காலை ஆப்கன் மன்னருக்கும் இந்திய சர்க்காருக்குமிடையே உறவை பலப்படுத்த காபூலுக்கு அனுப்பவில்லை. பாட்டியாலாவிலுள்ள ரோஷரிப் சிர்ஹிந்திகள் புனித முஸலிம் ஸதலத்துக்கு விஜயம் செய்யும்படி ஆப்கன் மன்னரை அழைக்கவுமில்லை. பஞ்சாப்பில் குழப்பமான நிலைமை இருந்து வருவதை யுக்தேசித்து கர்னல ஹுசைன், இங்கிருந்து காலி செய்து கொண்டு காபூலுக்குச் சென்றுவிட்டார்.

கிருஷ்ணமேனனுக்கு பாராட்டு

லண்டன், டிச. 5

இந்தியா ஹை கமிஷனர் கிருஷ்ணமேனனுக்கு பிரிட்டனிலுள்ள 2000 இந்திய மாணவர்கள் ஒரு உபசார விருந்தளித்தனர். திரு மேனனின் அறிவையும் தியாகத்தையும் பாராட்டி பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவு மந்திரி நோவல் பேக்கர், திரு ரெஜினல்ட் சோரன்சன், பேராசிரியர் ஹரோலடி லாஸ்கி முதலியோர் பேசினர்.

ஸ்ரீமதி. விஜயலட்சுமி பம்பாய் வந்துசேர்ந்தார்

பம்பாய், டிச. 5

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட நியூயார்க்கிலிருந்து விமானத்தில் இன்று இங்கு வந்து சேர்ந்தார்.

"உலகின் ஒப்பற்ற மாணிக்கம் நேரு"

காந்திஜி புகழ்மாலை

அவரால் இந்தியாவிற்கே புகழ்

புதுடில்லி, டிச. 4

"பண்டித நேரு இந்தியாவுக்கு மட்டும் மாணிக்கமல்ல அவர் உலகிற்கே ஒரு மாணிக்கம். அவருடைய பெயரால் இந்தியாவின் புகழும் மேலோங்கி பிரகாசிக்கிறது. பண்டித நேரு வெட்கித் தலை குனியும்படி நீங்கள் எவ்விதமான ஈன செய்கைகளும் செய்யக்கூடாது. ஒரு முஸ்லிம் குழந்தைக்குக் கூட தீங்கு வரும்படி நீஙகள் விடக்கூடாது. காஷ்மீரத்தில் அன்புகாட்டி அவர்களை சகோதரர்களாக்க வேண்டும். இது போன்ற நற்செய்கைகள் மூலம் அவர்கள் புகழ் பாரெங்கும் வீசும்" என்று பானிப்பெட்டில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் காந்திஜி குறிப்பிட்டார். எல்லா மந்திரிகளும் மக்களின் நன்மைக்காக இராப் பகலாக வேலை செய்கிருர்களென்றும், சர்க்காருடன் மக்கள் பூரணமாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அகில அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம்

ட்ரூமன் செனெட்டுக்கு சிபார்சு செய்கிருர்

வாஷிங்டன், டிச. 4

சென்ற செப்டம்பர் மாதம் பிரேஸிலிலுள்ள பெற்ரோபோலிஸ் என்னும நகரத்தில முடித்த "அகில அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தத்தை" சீக்கிரம் ஏற்றுக் கொள்ளும்படி தலைவர் ட்ரூமன் அமெரிக்க செனெட்டுக்கு அவ்வொப்பந்தத்தை அனுப்பியிருக்கிருர்.

மேலும் அவர் கூறியதாவது இந்த ஒப்பந்தத்திலுள்ள கொள்கைகளும் விதிகளும் தனக்கு மனமார ஏற்றவைகளென்றும் அதை செனெட்டிலுள்ளவர்களும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டினுர். (ராய்ட்டர்)

புகையிரதங்களில் சூதாடுதல் குற்றமாகும்

கொழும்பு, டிச. 6

புகைரதங்களில் சூதாடுதலும், பிச்சை கேட்பதும, பொருட்கள் விற்பது ரெயில்வேச் சட்டங்களின்படி குற்றங்களாக்கியிருக்கின்றனர். மற்றும பிரயாணிகளுக்கு இவர்களால் வசதியீனமேற்பட்டாலென்ன ஏற்படாவிட்டாலுமென்ன இவை குற்றங்கள்தான். இச் சட்டம் வருகிறமாதம் அமுலுக்கு வரும்.

தென்னுப்பிரிக்காவில் யூதர் தொண்டர் படை

பாக்தாதிலுள்ள பிரிட்டிஷ் அமெரிக்கஸ்தானிகர்கள் கண்டனம்

அராபிய நாடுகளின் யுத்த ஆயத்தங்கள்

ஜெருசலேம், டிச. 6

டெல்அவிவ் நகருக்கும்ஜாபா நகருக்குமிடையே யூதருக்கும் அராபியருக்கும் நடைபெறும் போர் ஓயவில்லை. நேற்று அங்கு 80 வீடுகள் கொளுத்தப்பட்டன. அங்குள்ள அராபிய குடும்பங்கள் அராபிய கிராமங்களுக்கு ஓட்டம் பிடித்தன. நான்கு நாள யுத்தத்தில் நேற்றிரவுவரை 33 யூதர்களும் 23 அராபியர்களும் கொல்லப்பட்டனர். அராபியர் தலைமைகாரியாலயத்தை யூதப் புரட்சிக்காரர் வெடிவைத்துத் தகர்த்தனர். பிரிட்டிஷ் துருப்புகள் பாதுகாவல் செய்து வருகின்றன. பிரிட்டிஷ் ஹைகமிஷனர் கன்னிஙஹாம் ஜெருசலேம நகரைச் சுற்றிப்பார்வையிட்டார். எகிப்து சூயஸ் கால்வாய் பகுதியிலுள்ள இரு பிரிட்டிஷ படைகள் விமானமார்க்கமாக ஜெருசலேமுக்குத் தருவிக்கப்பட்டிருக்கின்றன. கலகத்தில் 100 பேர்களுக்குக் காயம். 120 பேர்கள் கைதியாயினர்.

ஆயுத இறக்குமதி

1946 வது வருடத்தில் 1947ல் 10 மாத காலத்திலும் மத்திய கிழக்கு நாடுகள் இரண்டாயிரம பவுன் பெறுமதியான ஆயுதஙகளை இறக்குமதி செய்திருக்கின்றன.

பாலஸதீன பாதுகாப்புப் போருக்கு லெபானன் பாராளுமன்றம் ஒருலட்சத்து பதினுலாயிரம் பவுன்கள் செலவிட அனுமதித்தது.

நியூயார்க்கிலிருக்கும் தனது புத்திரனையும் அந்நியநாட்டு மந்திரிஎமீர்பெய்சலையும் திரும்பிவந்து விடும்படி சவூதி அராபிய மன்னர் கட்டளையிட்டிருக்கிருர்.

பாக்தாதில் ஈராக் முப்தி பாலஸதீனத்திற்காக ஒவ்வொருமுஸ்லிமும் போராடவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிருர்.

நேற்று பிரிட்டிஷ கல்லூரியும் அமெரிக்க தகவல் காரியாலயமும் ஆர்ப்பாட்டம் நடத்தி அரேபியர்களால் தாக்கப்பட்டது சம்பந்தமாக பாக்தாதிலுள்ள பிரிட்டிஷ ஸ்தானிகரும் அமெரிக்க ஸ்தானிகரும் கண்டனக்கடிதங்கள் அனுப்பியிருக்கிருர்கள். பிரிட்டிஷ், அமெரிக்க ஸ்தானிகர்களும் அந்த அந்நியநாட்டு ஸ்தானிகர்களும் துருப்புகளால் பாதுகாக்கப்பட்டுவருகின்றன.

பாலஸதீன பாதுகாப்பு போருக்கு பாக்தாதில் பதினுயிரம் தொண்டர்கள் ராணுவத்தில் சேர்ந்துவிட்டார்கள்.

பாலஸதீனத்தில் போர் மூண்டால் யூதர்கள் சார்பாகப் போராட தென்னுப்பிரிக்காவிலுள்ள யூதர் சங்கத்தார் தொண்டர்களைத் திரட்டி வருகிருர்கள்.

ரங்கூனிலுள்ள பர்மா முஸ்லிம்கள் பாலஸதீனப் போருக்கு ஆதரவளிப்பதாக அராபிய லீக் கமிட்டிக்கு தெரிவித்திருக்கிருர்கள்.

பாலஸதீன பிரிவினையை எதிர்த்துப் போராட 22,000 எகிப்தியர்கள் மகாநாடு கூடி அராபிய ஸதாபனங்களின் ஐக்கியத்தை ஏற்படுத்த தீர்மானித்தனர். பாலஸதீன போருக்கு ஆகும் செலவில் 42 சதவிகிதச் செலவு எகிப்திய சர்க்கார் கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

அராபிய லீக் கவுன்சில் புதன்கிழமை கூடும். (ராய்ட்டர்)

எலிஸபெத் இளவரசி ஆஸ்திரேலியாசெல்ல யோசனை

கான்பரா, டிச. 5

கூடிய சீக்கிரம் ஆஸதிரேலியாவுக்குச் சென்று சுற்றிப் பார்க்கத் தனக்குத் தருணம் கிடைக்கக் கூடும் என்று இளவரசி எலிஸபெத் ஆஸதிரேலிய பிரதம மந்திரி சிபலேக்கு எழுதிய கடிதத்தில் வெளியிட்டிருக்கிருர். அக்கடிதத்தில் தனது திருமண வைபவ காலத்தில் ஆஸதிரேலிய மக்கள் அனுப்பிய பரிசுகளையும் பாராட்டினர். (ராய்ட்டர்)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பிரிட்டனுக்கு இலங்கையில் ராணுவ தளம்

சுதந்திர ஆசிய நாடுகளுக்கு இலங்கையின் துரோகம்

ஒரு ஆங்கில ராஜதந்திரி வலையில் சிக்கி தவறிய வழியில் செல்லும் சிங்களத் தலைவர்கள்

சென்ற வியாழக்கிழமை வெளிவந்த "காலய" என்னும் சிங்களப் பத்திரிகையில் "வஜ்ஜிரபாணி" எழுதியதின் தமிழாக்கம்.

சென்ற 130 வருடங்களுக்கு முன் இத்தேசத்தை அந்நியர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்த துக்ககரமான சம்பவத்தினால் இன்று வரையும் இத்தேச மக்கள்படும் கஷ்ட துக்கங்கள் எண்ணிலடங்கா. தேச மக்களின் பொதுவான சுதந்திரம்-சுபீட்சத்திலும்-பார்க்க தத்தமது சுய லாபங்களையே குறிக்கோளாகக் கொண்டிருந்த அன்றைய சிங்களத் தலைவர்கள் முற்றும் தேசத் துரோகிகளாய் நடந்து கொண்டனர் இவர்களுக்கு முற்றும் உதவியாக இருப்பதுபோல் காட்டிக் கொண்ட வெள்ளையர்கள் திரை மறைவில் சதி செய்து தேசத்தைக் காட்டிக் கொடுத்த அந்த துரோகி குபேரக் கும்பல்களை கடைசியில் அடியோடு அழித்து விட்டனர்.

வெளி வேஷத்தில் சிங்களவர்களுக்கும், திரை மறைவில் இங்கிலாந்துக்குமாக இத்தேச மக்களை பிளவுபடுத்தி உள்நாட்டு நிர்வாகத்தை அப்படியே கைப்பற்றியவர்களில் ஜோன் டொயிலி முக்கியமானவன். இவன் அன்றுள்ள சிங்களத் தலைவர்களையும் செல்வாக்குள்ள பௌத்த பிக்குகளையும் தன் மாய வலையில் சிக்க வைத்தான். இப்படி தேச மக்களின் மீது அன்புள்ளவன் போல் பாசாங்கு பண்ணின ஜோன் டொயிலியின் சதிகாரச் செயலை பல வருடங்களுக்குப் பின் தான் சிங்களவர்களுக்கு அறிய முடிந்தது.

* * *

இன்றைக்கு இலங்கையை பிரிட்டனின் யுத்த அரணாகவோ அல்லது இங்கிலாந்தின் ஒரு பகுதியாகவோ தாரை வார்த்துக் கொடுப்பதற்கு சதி செய்கிற சிங்கள தலைவர்களுக்கு இத்தேச மக்களிடையே பிரபல்யம் வாய்ந்த வெள்ளைக்காரர்கள் சிலர் வேண்டிய உதவிகளை செய்து வருகிறார்களென்று தெரிகிறது. இவ்வெள்ளைக்காரக் கும்பலுக்கு ஒருவர் முதன்மையாக இருக்கிறார். அன்றய ஜோன் டொயிலிக்கு தேசத் துரோகிகளின் ஒத்துழைப்பு கிடைத்தது போன்று இவருக்கும் சிலருடைய ஒத்துழைப்பு இருப்பதினால் தேசத்தின் பொது விஷயங்களில் கைபோடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இத்துடன் அவருக்குபணக்காரப்பத்திரிகைகளும் உதவியாயிருக்கின்றன. இப்படியாகக் கிடைத்த சலுகைகளையும் வசதிகளையும் கொண்டு அவர் தம் வர்க்கத்தினருக்கு பயன்படக்கூடிய யாவற்றையும் இங்கே விதைப்பதற்கு செய்யாத தொன்றுமேயில்லை.

* * *

அரசியல் சீர்திருத்தம், சுவபாஷா பிரச்னை ஆகிய தேச மக்களின் சம்மதம் பெற்று தீர்மானிக்க வேண்டிய பொது பிரச்னைகளில் தலையிட்டு அவற்றை குழப்பி விட அவர் கையாளும் தந்திரம் ஜோன் டொயிலியின் தந்திரத்திற்கு சமமாக-மிகவும் நுணுக்கமாக இருக்கிறது. இதனால் எதிர்காலத்தில் உண்டாகப் போகும் ஆபத்தை அறியாதவர் இல்லாமலில்லை எனினும் தேச நிர்வாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் தாம் செய்வதெல்லாம் தேச மக்களின் சம்மதத்தின் மீது-அவர்களின் நலனை முன்னிட்டே செய்வதாக தேசத்தை தாரை வார்த்துக் கொடுத்த இவர்கள் பிரசாரம் செய்கிறார்கள்.

* * *

அந்த வெள்ளையர் படித்தறிந்த மேதாவிதான் அவர் இங்கிலாந்தில் ஒரு சோஷியலிஸ்ட் வாதியென்று பிரசித்தி பெற்றவர். எனினும் சூயஸ் கால்வாய்க்கு இக்கரை (இலங்கைக்கு) வந்தவுடன் ஒன்றாம் நம்பர் சாம்ராஜ்யவாதியென்ற எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இந்நாட்டிலிருக்கும் பல்லிளிக்கும் கோழைத் தலைவர்களின் நடவடிக்கையினால் இங்கெல்லாம் அவருக்கு நவசக்தியுண்டாய் இருக்கிறதென்றுஎல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

கால தேச வர்த்தமானத்தையொட்டி அரசியல்-பொருளாதார-சமூக தொழில்-வர்த்தகத் துறைகளில் சுயேச்சையான அறிவை உபயோகிப்பதற்கு இலங்கையர்களுக்கு உரிமையிருக்கவேண்டும். இலங்கையை இங்கிலாந்தின் ஒரு பகுதியாக எண்ணுபவர்கள் எப்படியாயினும, தம் தேசத்தின் மீது அபிமானம் உடைய ஒவ்வொரு இலங்கையனும் நமது கலை நாகரிகம் முன்னேற்றம் பாதுகாப்பு முதலிய பொதுப் பிரச்னைகள் மீது அயல் நாட்டின் ஒத்துழைப்பும், உதவியும் அதியாவசியம் வேண்டுமென்பதை மறந்து போகக் கூடாது.

எப்படியாயினும், இலங்கையின் அதிமுக்கிய பாதுகாப்பு சம்பந்தமான உடன்படிக்கையை தயார் செய்யும் போது, இத்தேசத்து பிரதம மந்திரியார் இதை இரகசியமாகவைத்துக் கொள்ளவேண்டியதாக நடவடிக்கை யெடுத்திருக்கிறார் இதற்கு உடந்தையாய் இருந்தவர்கள் பிரதம மந்திரியாரின் இரண்டு மூன்று கைத் தாளக்காரர்களும் பிரிட்டிஷ் அரசாங்கமுமே தவிர, இத்தேச மக்களையும் மனிதர்களாகக் கருதி இவற்றை அறிவிக்கவில்லை இதுதான் போகட்டும் தேச மக்களால் தெரிவு செய்யப்பட்ட பொது நலப் பிரதிநிதிகளுக்குக்கூட இந்த உடன்படிக்கையைப் பற்றி எதுவும் அறிந்து கொள்ளுவதற்கு இடம் வைக்கவில்லை. எல்லாவற்றையும் மூடுமந்திரமாக வைத்துக் கொண்டு அவற்றிற்கு கைச்சாத்திட்டு முடிந்தது அதை விளம்பரப் படுத்தியபிறகு இப்பொழுது சொல்லுவதாவது, எங்களுக்குஇலங்கைக்கு-பூரண சுதந்திரம் கிடைத்து விட்டது, என்பது தான்.

சுதந்திரத்தை வழங்கும் எஜமான் நாட்டோடு செய்யும் உடன்படிக்கையை இரகசியமாக தயார் செய்வதின் அர்த்தமென்ன? சம அந்தஸ்துடைய தேசமாகமனப்பூர்வமாகஒப்புக் கொள்ளாத இரு நாடுகளிடையே ஏற்படும் உடன்படிக்கையில் சமத்துவம் இருக்க முடியுமா?

* * *

தேசத்தின் முக்கியமானபலம் பாதுகாப்பேயாகும். பாதுகாப்பு சம்பந்தமாக இன்னொரு நாட்டோடு உடன் படிக்கை இருக்கும் போது, அப்படி பாதுகாக்கபபடும் சுதந்திரம் எத்தகையதாய் இருக்கும்? பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் ஒரு நாட்டின் யுத்த கேந்திர ஸ்தானமாக இலங்கையை கொடுத்திருக்கும்போது, அடுத்துள்ள நாடுகளுக்கு ஏற்படும் ஆபத்தை சொல்ல வேண்டுமா? அது பயங்கரமாய் தான் இருக்கும், இந்தியா, பர்மா, மலாய், சுமாத்ரா ஆகிய நாடுகள் ஆத்ம பரித்தியாகததோடு போராடிப் பெற்றிருக்கிற-பெறப்போகிற-சுதந்திரத்திற்கு தடை செய்தா இலங்கை சுதந்திரம் பெறப்போகிறது?

சுதந்திர மசோதாவை இரகசியமாக தயார் செய்ததிலிருந்துதெரியக்கிடப்பதாவது, அதில் தெளிவில்லாத அம்சங்கள் இருப்பதேயாகும. ஆனபடியால் தேசத்தின் மீது அபிமானமுள்ள யாவரும் இந்த பொதுப் பிரச்சினையின் மீது நிசப்தமாய் இருக்கக் கூடாது. இரகசியமாக செய்யப்பட்ட இந்த துரோக உடன்படிக்கைக்கு எதிராக தேசமக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சிசெய்யவேண்டிய-போராட வேண்டிய சமயம் இது தான்.

பட்டு ஏற்றுமதிக் கட்டுப்பாடு ரத்து

இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, டிச. 5

ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையைத் தளர்த்துவதற்கு இந்திய சர்க்கார் எடுத்து வரும் நடவடிக்கைகளின்படி இந்தியப்பட்டு உற்பத்தியாளர்கள் வெளி நாடுகளுக்குத் தாராளமாக இந்தியப் பட்டை ஏற்றுமதி செய்ய சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு 1948 மார்ச் மாதம்வரை அமுலிலிருக்கும்.

சணல்

இந்தியா பிரிக்கப்பட்டதால் சணல் வர்த்தகத்தில் சங்கடமேற்பட்டிருக்கிறது. இந்தியாவில் 20 சதவிகிதமும் பாகிஸ்தானில் 80 சதவிகிதமும் சணல் ஏற்றுமதியாகிறது. இந்தியாவில் 17 லட்சம் 'மேல்' சணலும் பாகிஸ்தானில் 68 லட்சம் சணலும் உற்பத்தியாகிறது ஆனால் சணல் விளையும் பூமி பெரும்பாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருக்கிறது. சணல் ஆலைகள் எல்லாம் இந்தியாவிலிருக்கின்றன. ஆகவே சணல் உற்பத்தியைப் பெருக்க இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

மின்சார அதிர்ச்சியால் மூவர் மரணம்

தொழிலாளிகளின் பரிதாப முடிவு

கண்டி, டிச. 6

பேராதனையிலுள்ள விவசாயப் பகுதியந்திரத் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர் மூவர் மின்சாரத் தாக்குதலின் காரணமாக மாண்டுபோனார்கள் மேற்படி சம்பவத்துக்குக் காரணம் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்த ஓர் சாமான் தூக்கும் யந்திரம் (கிறேன்) மேலே இருந்த மின்சாரக் கம்பியுடன் உராய்ஞ்சியமையே எனத் தெரிகிறது. இதன் பலனாக மேற்படி யந்திரத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஐவர் ஆபத்துக்குள்ளானார்கள்.

இவர்களில் இறந்தவர்கள் போக மற்றவர்கள் இருவரும் கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செலலப்பட்டார்கள். இருவரும் "இரும்பு இருதய"த்தின் உதவியால் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறார்கள். ஒருவரின் நிலைமை படுமோசமாகவே இருக்கிறது

பம்பாயில் கள்ள ரேடியோ

ஹைதராபாத்துக்கு அனுப்பமுயன்ற முஸ்லிம்கள்

பம்பாய், டிச. 5

பம்பாயில் போலீசார் பல இடங்களைச் சோதனையிட்டதில், லைசென்ஸில்லாத கள்ள ரேடியோ டிரான்ஸமிட்டர்கள் 20-ம் ரகசிய பாஷை புத்தகமும் கைப்பற்றப்பட்டன அரசியல் விஷயங்களை அனுப்ப இவை உபயோகிக்கப்பட்டு வந்தன. இவைகளை ஹைதராபாத்துக்கு அனுப்ப முயன்ற இரு முஸ்லிம் வர்த்தகர்களை போலீசார் கைது செய்தனர்

இந்தோனேஷியாவின் சில பகுதிகள்

கூட்டரசாங்க முறை கோருகின்றன

பட்டேவியா, டிச. 4

இந்தோனேஷியாவிலுள்ள ஜனநாயக ஆட்சி முறையைக் கைக்கொள்ளாத பகுதிகள் தங்களுக்குக் கூட்டரசாங்க முறையே தேவையெனக் கோரி ஓர் திட்டத்தைத் தயாரித்திருப்பதாக இங்கேயுள்ள டச்சுக்காரர் கூறுகின்றனர். இப்பகுதிகளின் ஜனத்தொகை இந்தோனேஷியாவிலுள்ள 7 கோடியில் அரைவாசியாகும்.

ரயில்வேப் பகுதியில் 8-மணி வேலை நேரம்

அமுல் நடத்துவதற்கு முயற்சி

கொழும்பு, டிச. 6

அரசாங்க ரெயில்வே உத்தியோகஸ்தர் 8-மணித் தியாலத்திற்கு மேலதிகமாக வேலை செய்து தங்கள் சம்பளத்தை அதிகரித்துப் பெற்றுக் கொள்வது சமீப கால வழக்கமாக இருந்தது. அதற்கு முற்றுப் புள்ளி வைத்து எல்லாருக்கும் ஒன்றேபோல் 8-மணி நேர வேலையே கொடுப்பதென இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது இதன் காரணமாக அடுத்த வருடம் முடிவதற்குள் 50 ஸ்டேஷன் அதிகாரிகள், 35 நமாஸ்தாக்கள் 40 டிரைவர்கள், 55 ஷன்டிங் டிரைவர்கள் 20 கார்ட்மார்கள், 40 கீழ் கார்ட்மார்கள் ஆகியோர் ரயில்வேப் பகுதியினரால் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று தெரிகிறது.

தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, டிச. 6

அய்யாசாமியின் மகன் ராஜு மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை போகம்பரை ஜெயிலில் டிசம்பர் 1-ம் தேதி நிறைவேற்றி வைக்கப்பட்டதாக கவர்னர் காரியாலய அறிக்கை ஒன்று கூறுகிறது.

வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் செய்திகள்

இந்திய செய்தி ஸ்தாபனம் அவசியம்

புதுடில்லி, டிச. 5

இந்தியா பாராளுமன்றத்தில் சர்தார் படேல் பின்வருமாறு தெரிவித்தார்:-

நன்றாக ஸ்தாபிதமான அதிகாரப் பற்றற்ற இந்திய செய்தி ஸ்தாபனம் இல்லாததால் இந்தியாபற்றி வெளிநாடுகளுக்குச் செல்லும் செய்திகள் முழுதும் அந்நிய நாட்டுச் செய்தி ஸ்தாபனத்தின் ஆதிக்கத்திலிருந்து வருகிறது. ஆதலால் பத்திரிகைக்காரர்கள் ஒன்று சேர்ந்த இந்திய தேசிய செய்தி ஸ்தாபனமொன்றை நிறுவுவது மிகவும் அவசியமாகும்.

காலிக்கு மின்சார வசதி

ஏற்படுத்துவதற்காக ரூபாய் 5 லட்சம் கடன்

காலி, டிச. 6

காலியில் அதிகரித்த மின்சார வசதி ஏற்படுத்துவதற்காக காலி முனிசிப்பல் சபை மத்திய கடன் போர்ட்டாரிடமிருந்து ரூபாய் 5 லட்சம் பெற்றுக் கொள்ளப்படுமென அறியப்படுகிறது. இவ்வேலைகள் பூர்த்தியுறும் பட்சத்தில் அரசாங்கத்துக்கு வரி வருமானம் அதிகரிக்குமென நம்பப்படுகிறது.

நமது ஜோஸியப் பகுதி:

கும்ப ராசியின் கால பலன்

['சுகன்யா' எழுதுவது]

1940-ம் ஆண்டு தொடக்கம் கும்பராசியின் காலம் நடைபெறுகிறது. இரண்டாம் மகா யுத்தத்துடன் கும்பராசியின் காலம் ஆரம்பமானது. கும்ப ராசியால் ஆளப்படும் ரஷியா இந்த மகாயுததத்தில் வெற்றி பெற்று தனது ஆதிக்கத்தை உலகமெங்கும் செலுத்தவதற்கு வேண்டிய கருமங்களைச் செய்து வருகின்றது. யுததத்தின் பின் பிரித்தானியாவிலும் தொழிலாளர் கட்சியின் அரசாங்கமே உண்டாகியிருக்கின்றது.

கும்பராசியின் ஆதிபன் சனி பகவான், சனியை நீசனென்றும் சொல்லப்படுகிறது. சனி பகவான் பொது மக்களையும் தொழிலாளர்களையும் நீசரையும் ஆதரிக்கும் கிரகம். சனிபகவானே கிழக்கு நாடுகளையும் ஆதரிக்கும் கிரகம். சனிபகவானின் காலமாதலால் கிழக்கு நாடுகள் ஒவ்வொன்றாய் விடுதலையடைகின்றன.

சனி பகவான் கிழக்கு நாடுகளுக்கு விசேஷ பலனைச் செய்வார். கும்ப ராசியின் காலத்தில் கிழக்கு நாடுகளுககுள் ஒற்றுமைகளுண்டாகும். கிழக்கு நாடுகளில் எங்கும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுவுடமைக் கட்சியின் அரசாங்கமே நடைபெறும். கிழக்கு நாடுகளின் செல்வாக்குகள மேற்கு நாடுகளிலும் நடைபெறும்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த தீவுகளெல்லாம் விடுதலையடையும். மலேயாவும் 1948-ம் ஆண்டில் விடுதலையடையும். இந்தோனேஷியாவுடன சேர்ந்து அரசாங்கம் நடைபெறும். வெள்ளையர்கள் பொதுவாக எல்லாக் கிழக்கு நாடுகளிலுமிருந்து வெளியேறவேண்டி நேரிடும்.

இந்தக் காலத்தில் ஜப்பான் சீனா ஒற்றுமைகளுண்டாகும். சீனாவில தற்சமயமேற்பட்டிருக்கும தொல்லைகள் நீஙகும். சீனாவிலும் இந்தியாவைப்போன்ற அரசாங்கமே கையாளப்படும். சீனாவிலுமிருந்து வெள்ளையர் வெளியேறவும்வேண்டி நேரிடும். சீனாவில் அமெரிக்கரின் செல்வாக்குகள் குறையும்.

கும்பராசி காலததில் ரஷியா கிழக்கு நாடுகளின் ஆதரவைப் பெறும். ரஷிய- ஜப்பானிய ஒற்றுமைகளேற்படும. அமெரிக்கரை ஜப்பானிலிருந்து கடத்துவதற்கு ரஷியா முயலும். இந்தக காலத்தில் ஜபபான் பலமடையும். ஜப்பானிலும் பொதுவுடமைக் கட்சியே பலமடையும்.

கும்பராசி காலத்தில் கிழக்கு நாடுகள் கைததொழில் கமத்தொழில், வியாபாரம முதலியனவற்றிலும் விசேஷ நிலையடையும்.

இந்த வாரத் தினப் பலன்

ஞாயிறு-டிசம்பர் 7-இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் கொண்டாட்டங்களுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம்-மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு மீனராசியில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்.

திங்கள். டிசம்பர் 8-இன்று பொதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொள்ளல் விற்றலுக்கும் கொண்டாட்டங்களுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம்-மேடம், இடபம், சிங்கம், துலாம், தனுசு மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பொருட்பேறுண்டாம்.

செவ்வாய். டிசம்பர் 9-இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷ தினம்.

சந்திரலக்னம்-மேடம். இடபம், சிங்கம், துலாம், தனுசு மகர ராசியில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகமுண்டாம்.

புதன். டிசம்பர் 10- இன்று மரவகை செடிவகை நடுவதற்கும், பிரயாணத்திற்கும், புதுக் கணக்குப் பதிதலுக்கும், கொள்ளல் விற்றலுக்கும், பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்குப் விசேஷ தினம்.

சந்திரலக்னம்-இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் அநுகூலமுண்டாம்.

வியாழன். டிசம்பர் 11- இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷ தினம்.

சந்திரலக்னம்-இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத் தினத்தில் வெற்றிகளுண்டாம்.

வெள்ளி. டிசம்பர் 12-அமாவாசை. இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷ தினம். இத் தினத்தில் நீரில் கவனமாயிருத்தல் வேண்டும்.

சந்திரலக்னம்-இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத் தினத்தில் முன்னேற்றமுண்டாம்.

சனி. டிசம்பர் 13- இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் கொண்டாட்டங்களுக்கும், பிரயாணம் செய்வதற்கும் பொது நாள்.

சந்திரலக்னம்-மிதுனம், கடகம், துலாம், தனுசு, கும்பம் மீனராசிகளில்பிறந்தவர்களுக்கு இத் தினத்தில் பண லாபமுண்டாம்.

வழக்கறிஞர் திரு. தம்பித்துரை சிலாபம் நீதிபதியாக நியமனம்

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணத்தில் அத்தவக்காத்தாக இருக்கும் திரு எஸ். தம்பித்துரை அவர்கள் நீதித்துறை சேவையாளர் கமிஷனால் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பதாக நமது யாழ்ப்பாண நிருபர் அறிவிக்கிறார்.

திரு. தம்பித்துரை இம்மாதம் 15-ம் தேதி தொடக்கம் சிலாபம் நீதிபதியாகக் கடமை பார்ப்பார்.

நீதித்துறை ஊழியக் கமிஷனால் செய்யப்பட்ட முதல் நியமனம் இது என்பது கவனிக்கத்தக்கது.

சகோதரியைக் கொலை செய்ததாக வழக்கு

15 வயதுப் பையன்மேல் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 6

மாவனல்லைப் பகுதியில் உள்ள ரண்டி வெலையில் ஓர் கொலை நடந்துள்ளது இக்கொலை சம்பந்தமாக 22 வயதுள்ள சிரியாவதி என்னும் தனது சகோதரியைக் கொலை செய்ததாக விமலசேன என்னும் 15 வயதுச் சிறுவன் குற்றம் சாட்டப்பட்டுள்ளான். பிரஸ்தாபச் சம்பவம் டிசம்பர் 4-ம் தேதி இரவு 8 மணியளவில் நடந்ததாகத் தெரிகிறது. (ந - நி)

தங்க பஸ்பம்

அமிர்தம் போன்ற ருசியும் மணமும் உள்ள சதாவரி லேகியத்தில் தங்க பஸ்பம் சேர்த்துச் சாப்பிட்டுவந்தால் இரத்த விருத்தி, சரீர புஷ்டி உண்டாகும். தேஜஸ், புத்திர சந்தானம் உண்டாக்கும். நீர்க்கோளாறுகள் சுகமாகும். நரம்புகளுக்கு பலம், வாலிபம் உண்டாகும்.

40 வேளை (20-நாள்) தங்கபஸ்பம் ரூ. 20—00
" " " சதாவரி லேகியம் ரூ. 3—00
வி. பி. செலவு ரூ 2-00 (கேட்லாக் இனாம்)

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி (S. India.)

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச் சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029
டெலிகிராம்: 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

கிறிஸ்மஸ் பண்டிகைக்கேற்ற

சேலைகள்!

கண்கவர் பலவர்ண டிசைன்களில் நவீன முறையில் தயாரிக்கப்பெற்ற, சேலம், கோயம்புத்தூர் 100 நிர்., 80 நிர்., நூல் ஜரிகை பார்டர்களுள்ள சேலைகள்!

இத்துடன் பெங்களூர், காஷ்மீர் பட்டுச்சேலைகளும் இன்னும் சகலவிதமான பிடவை தினுசுகளும் கிடைக்கப்பெறும்

M. J. வேதநாயகம் & கோ,
(பிடவை வியாபாரம்)
140, கெய்ஸர் தெரு, கொழும்பு.

சுய அறிவுப் போட்டி நிர். 21.
விசேஷ கிறிஸ்மஸ்
பரிசு ரூ. 3000-00
முடிவு தேதி 12-12-47.
மதுரைத் தமிழ்ப் பேரகராதிகள்
விசேஷ பரிசுகள்

இலங்கையில் வங்கி யத்தாட்சியுடன் நடாத்தப்பட்டுவரும் தமிழ் குறுக்கெழுத்துப் போட்டி இது ஒன்று மாத்திரமே.

கூப்பன்களுக்கு எழுதுங்கள்; இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

விபரங்கட்கு:-

சுய அறிவுப் போட்டிக் காரியாலயம்,
69, மலிபான் வீதி, த. பெட்டி 764
'Phone: 3032. கொழும்பு. T'Gram "SHUYARIVU" COLOMBO.

உணவுக்கும் உடைக்கும் வெளிநாடுகளை எதிர்பார்ப்பது வெட்கக்கேடு

(1ம் பககத் தொடர்ச்சி)

நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பட்ஜெட்டில் எதுவிதமான தீர்மானமும் சேர்க்கப்படவில்லை. இன்று மற்ற நாடுகளிலெல்லாம் இப்பிரச்னையே முழுக் கவனத்தையும் வசீங்துள்ளது. இப்பிரச்னையை தீர்ப்பதற்கு ஆங்காங்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

மலேயாவில் இலங்கை தொழிலாளர்

மலேயாவிலுள்ள தொழிலாளர் [இயக்கத்தை] நசுக்குவதற்காக இலங்கையிலிருந்து தொழிலாளர் எடுக்கப்பட்டுள்ளனர் மலேயாவுக்கு அனுப்பப்பட்டுள்ள எல்லா இலங்கையரையும் பிரதம மந்திரி உடனே திரும்பவும் இலங்கைக்கு அழைத்துவிட வேண்டும்.

குதிரைப் பந்தயம் நிறுத்தப்பட வேண்டும்

இலங்கையில் குதிரைப் பந்தயம் நடத்தப்படுவது உடனே நிறுத்தப்பட வேண்டும் இவ்வளவு காலமும் உணவுக்காக அழுத மக்களுக்கு இப்போது மந்திரி சபை கல்லைக் கொடுத்துள்ளது.

அதிக கஷ்டங்களையும் சமாளித்து இந்த பட்ஜெட்டைத் தயாரித்ததற்கு நிதி மந்திரிக்கு நன்றி செலுத்துகிறேன்,

வர்த்தக மந்திரி திரு ஸி. சுந்தரலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

காலி தொகுதி அங்கத்தவர் எவ்விதமாகத் தாறுமாருகப் பேசினுலும் அவரை நாங்கள் எல்லோரும் நேசிக்கிரோம் போக்குவரத்து மந்திரியைக் கண்டித்து அவர் பேசியபோது இதே மந்திரி பதவியில் திரு தஹநாயகா இருந்தால் போக்குவரத்து நிர்வாகம் எப்படியிருக்குமென்று நான் ஆலோசித்தேன்,

சம்பள விஷயமாக காலி] அங்கத்தவர் பேசுகையில் சில விஷயங்களைக் கூறினர். ரூ. 300 வருடத்துக்கு பெறும் அரசாங்க உத்தியோகஸ்தர் யாரென கேட்க விரும்புகிறேன்,

இத்தருணத்தில் திரு தஹநாயகா—"வாடிவீட்டு நிர்வாகி" என்று கூறினர்.

திரு சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில் வாடிவீட்டு நிர்வாகி அரசாங்க உத்தியோகஸ்தரல்லவென்றும் ஆனல் டிஸ்டிரிக்ட் ரஸ்தா கமிட்டிகளால் வேலைக்கு எடுக்கப்படுபவர் என்றும் கூறிவிட்டு தொடர்ந்து பேசியதாவது:—

'பாராளுமன்ற]அங்கத்தினரின் சம்பளங்களைக் குறைக்க வேண்டுமென காலி அங்கத்தினர் கூறியது நல்லதல்ல. அவருக்கு தம்முடைய அலவன்சைக் குறைத்துக் கொள்ள முடியும். ஆனல் மற்றவர்களுக்கும் அது முடியுமென்று கூறுவது இயலாது."

இந்த நேரத்தில் திரு சுந்தரலிங்கம் !குறிப்பிட்டதன்மேல் திரு தஹநாயகா, பட்ஜெட் தீர்மானங்கள் சபையில் சமர்ப்பிக்கப்படுமுன்னரே வெளிவந்துவிட்டதென்பதற்கு ஆதாரமாக டைம்ஸ பத்திரிகையொன்றை சமர்ப்பித்தார். அப்பத்திரிகையில் நிதி மந்திரியுடன் படத்துடன் அதிகரிக்கப்பட்ட சுங்கவரிகள்பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனைச் சமர்ப்பிக்கையில் தாம் நிதி மந்திரியின் யோக்கியதைக்கு எதிராக ஒன்றும் குறிப்பிடவில்லையென்று தெரிவித்தார்.

திரு சுந்தரலிங்கம் பேசுகையில் "டைம்ஸ" பத்திரிகையில் வெளிவந்த விஷயத்தைக்கொண்டு பட்ஜெட் வெளிவந்ததென்று கூற முடியாதென்றும் அதனை எழுதியவர் சுங்கவரிகள் அதிகரிக்கப்படலாமென ஆலோசித்திருக்கக் கூடுமென்றும் தெரிவித்துவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

காலி அங்கத்தவர் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டதென்று கூறுகின்ருர். ஆனல் வாழ்க்கைச் செலவு புள்ளி விபரம் 10 சத விகிதம் குறைந்துள்ளது. ஜவுளி வகைகளின் விலை குறைந்து கொண்டு வருகிறது. இலங்கையின் ஜவுளி நெசவு தொழில் செழிக்க முடியாது அதற்குப் போதிய நூலும் இங்கு கிடையாது. பட்ஜெட் தயாரிப்புபற்றி திரு தஹநாயகா பிழையாக விளங்கிவிட்டார். நிதி மந்திரி பட்ஜெட்டை சமர்ப்பித்துப் பேசுகையில் இது நீடிக்கும் பட்ஜெட் என்று கூறியுள்ளார்.

வெண்ணெய்மீது வரி

வெண்ணெய் மீதுள்ள இறக்குமதி வரி ஒரு காரணத்துடன்தான் அதிகரிக்கப்பட்டது. யுத்தத்துடன் இலங்கையில் தேங்காயின் உபயோகம் மிகவும் அதிகரித்துவிட்டது வெகு சிலரே வெண்ணெயை உபயோகிக்கின்றனர். கிராமப் பகுதிகளில் மிக 'மிகக்குறைவாகவே வெண்ணெய் செலவாகியுள்ளது.

ஸ்டெர்லிங் பாக்கிகள்பற்றி திரு சுந்தரலிங்கம் பேச ஆரம்பித்தபோது யுத்தகாலத்தில் இறக்குமதிப் பொருள்கள் அதிகம வாங்குவதற்கு முடியாது போய்விட்டதால் ஸடெர்லிங் பாக்கிகள் அதிகரித்துவிட்டனவென்று கூறினர். மத்தியானம் 12 மணியானதால் இடைநேரத்துக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது. மத்தியான இடைவேளைக்குப்பின் சபை கூடியபோது திரு சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:-

ஸடெர்லிங பாக்கிகள்

ஸடெர்லிங பாக்கிகளிலிருந்து இறக்குமதிப் பொருள்களுக்கு பணம் கொடுக்கப்பட்டுவரப்பட்டது. முக்கியமாக உணவுப் பொருள்களுக்கே கொடுக்கப்பட்டுவரப்பட்டது வரிப்பணங்களைச்சேர்த்து அதில் இருந்து உணவுப்பொருள்களுக்குபணம் கொடுக்க முடியாது. வரிப்பணத்தில் இருந்து இவற்றுக்கு பணம் எடுத்துக்கொடுத்தால் தேசத்திலே புரட்சிதான் ஏற்படும். காலி அங்கத்தவர்தான் முதலில் அதனைத் தலைமை வகித்து நடத்துவார்.

இப்பொழுது கறுவா உற்பத்தி தொழில் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது இந்த தொழில் பாதுகாக்கப்படவேண்டும்.

நூறு கோடி ரூபாய்

இலங்கையின்ஸ்டெர்லிங் பாக்கிகள் 100 கோடி ரூபாய்களாகும். இதில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் 70 கோடி ரூபாயும் இந்தியாவில் 30 கோடி ரூபாயும் இருக்கிறது. இந்த ஸ்டெர்லிங் பாக்கிகளை விரைவில் செலவாக்கப்படுகிறது. பத்து மாத காலத்துக்குள் ஸ்டெர்லிங பாக்கியில் இருந்து 32 கோடியே 30 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. இது முக்கியமாக உணவுப் பொருள்களின் அதிக விலைக்கு அரசாங்க சகாயப் பணமாக கொடுக்கப்பட்டதாகும். தேச மக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிக்க விருப்பமில்லை. இலங்கைக்குத் தேவையான உணவு முழுவதையும் உற்பத்தி செய்ய முடியவில்லையே யென்பதை வெட்கத்துடன்ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அரிசி விலை

இலங்கைக்கு பிரேஸில்அனுப்பிய அரிசிக்கு டன் ஒன்றுக்கு 100 பவுண்வீதம் வசூல் செய்துள்ளது ஆனல் பாமா டன் ஒன்றுக்கு 40 பவுண்தான் வாங்கியுள்ளது.

அரசாங்க உத்தியோகஸ்தரின் அதிக பட்சசம்பளம் பற்றி காலி அங்கத்தவர் கூறியதை நான் ஆட்சேபிக்கிறேன். நல்ல திறமைசாலிகளை சேவைக்கு எடுப்பதற்கு அதிக கவர்ச்சியுள்ள சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. சிவில் சர்வீஸ் பரீட்சை சித்தியடையாதவர்கள் வருடத்துக்கு ரூ 30,000 மேல் சம்பாதிக்கின்றனர். சிவில் உத்தியோகஸ்தரின் சம்பளம் அதிகமாக இருக்க வேண்டும்.

கொக்கோ உற்பத்திதொழில்

இந்தியாவில் காங்கிரஸ மந்திரிகள் மாதத்துக்கு ரூ 5000 சம்பளமாகப் பெறுகிருர்கள் இலங்கை கொக்கோ உற்பத்தி தொழில் சம்பந்தமான மகாநாடொன்றுக்குச் சென்று திரும்பியுள்ளேன் இதனுல் ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி இலங்கைக்குக் கிடைக்கும் வருமானம் மேலும் சுமார் 10 லட்சம் ரூபாய் அதிகரிக்கும்.

தேசத்தில் அதிக நாணயப் புளக்கம் இருந்தது. இப்பொழுது குறைந்து வருகிறது. இப்பொழுது புளக்கத்தில் உள்ள நாணய நோட்டுக்கள் குறைந்து வருகின்றன. மக்களின் கஷடங்களைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இலவசக் கல்வி

இலவசக் கல்வி என்பது தனிய இலவசப் போதனையைக் குறிக்கவில்லையென்று பிரித்துக் கூறப்படுகிறது. இலவசஉணவு, இலவசக் கல்வி போதனை, இலவச உடை - இவ்விதம் கண்டனக்காரர்கள் அதனை வியாக்கியானம் செய்கின்றனர். கண்டனக்காரர்கள் தங்கள் குழந்தைகளை அரசாங்கத்திடம் அனுப்பும்படி கேட்கிறேன். இச்சமயத்தில் திரு. தஹநாயகா கூறியிருந்தவிஷயமொன்றைப்பற்றி நிதி மந்திரி இடையிட்டுப் பேசினர். அப்பொழுது திரு. ஈ எப் என். கிரேஷயன், திரு தஹநாயகா வித்தியாசமாக எதுவும் குறிப்பிடவில்லை யென்ருர். சபாநாயகர் பேசுகையில், காலி அங்கத்தவர் தாம்பேசியதை வாபஸ பெற்றுள்ளார் என்று கூறினர்

திரு. பீட்டர் கெனமன் பேசியதாவது:-

வர்த்தகர்களிடம் இருப்பில் இருந்த பொருள்களின் விலைகள் அதிகரிப்பதை மந்திரிசபை தடுக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். புதிய வரிகள் விதிக்கப்படுமுன் வர்த்தகர்களிடமிருந்த இருப்புப் பொருள்கள் பற்றி கணக்குஎடுக்கப்படடதாவென்பதை அறிய விருப்புகிறேன்.

உயர்தர அதிகாரிகளது சம்பளங்களைக்குறைத்தும்குறைந்த உத்தியோகங்களில் உள்ள அதிகாரிகளுடைய சம்பளங்களையும் அதிகரிப்பதும் பற்றி வர்த்தக மந்திரி பேசுகையில் அது சரியானதல்லவென்று கூறினர். சம்பள விஷயங்களின் சம நிலையையும் அலவன்ஸ்களின் நிலையையும் நோக்குமிடத்து மத்திய வகுப்பு தொழிலாளர்களுக்கு தினசரித் தொழிலாளரிலும அதிகமாக அலவன்ஸ் முதலியன கொடுக்கப்படுகிறது.

அரசாங்கத்தால் தயாரிக்கப்படும் வாழ்க்கைச் செலவு புள்ளி விபரங்கள் மிகவும் மோசடியானதாகும். மிகவும் கீழ் நிலையைக் கொண்டு அந்த அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன சில ரக உணவுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளை வாபஸ் பெறுவது பற்றி நிதி மந்திரி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்ஜெட் கீழ்தர, மத்திய வகுப்பினரை வெகுவாகப் பாதிக்கும். மிகவும் கஸ்டப்பட்டுள்ள அவர்கள் வர்த்தக சலுகைகளைக் கூட அனுபவிக்க சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. வாழ்க்கைச் செலவை அவர்களால் குறைக்கமுடியவில்லை, அதிகரிக்கப்பட்ட வரிகள் அவர்களை வெகுவாகப் பாதிக்கும். வெண்ணெயும் நெய்யும் வருமானத்துக்கு பன்னிரண்டரை லட்சம் ரூபாய்களைக் கொண்டுவரும். இந்த வருமானத்தை வேறு வழிகளால் பெறுவதற்கு மந்திரி முயற்சிக்க வேண்டும்.

பிரிட்டன் தரவேண்டிய கடன் நிதியைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பிரிட்டன் அந்தகடன்நிதியைக் கொடுக்கத் தவறின் இங்குள்ள பிரிட்டிஷ் முதலாளிகளுடன் அது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்க்க வேண்டும பஸ போக்கு வரத்தை தேசியமயமாக்க வேண்டும். பெரிய பஸ முதலாளிகள் யூ என். பி ஆதரவாளர்களாக இருக்கிருர்கள். யுத்த காலத்தில்தான் பல பஸ முதலாளிகள் பணம் திரட்டினர்கள்.

அரசாங்க இலாகாக்கள் அதிகரிக்கப்பட்டுவிட்டன. தகவல இலாகா தேசத்துக்கு அவசியமில்லை. யூ. என். பி யின் பிரசாரத்துக்கே இந்த இலாகா இருக்கும்,

ஏழைகளைப் பொறுத்தமட்டில் ரேடியோ இலாகா எதுவிதமான பிரயோஜனத்தையும செய்யவில்லை. பொது மக்கள் கவனிக்கப்படவில்லை. பல கமிஷன்களது சிபார்சுகளும் கவனிக்கப்படவில்லை. இப்பொழுது சபை முன் விவாதிக்கப்படும் பட்ஜெட்டில் கைத்தொழில் வளர்ச்சிக்கு இடமில்லை தேச பொருளாதார அபிவிருத்திக்கும் இந்த பட்ஜெட்டில் இடமில்லை.

திரு ஜே. டபிள்யூ. பெரேரா பேசுகையில் கிராமப் பகுதிகளில் வேலையில்லாது அநேகர் கஷ்டப்படுவதாகவும் தேசத்தில் உள்ள நெசவாலைகள் மூடப்படுகின்றனவென்றும் அவற்றில் வேலை செய்து வந்தோருக்கு வேலைகள் இல்லையென்றும், தேசத்தின் உணவு உற்பத்திக்கு அதிக வேலைகள் செய்யப்படவில்லையென்பதை விவசாய மந்திரியே ஒப்புக்கொள்ளுவாரென்றும் உணவு உற்பத்திக்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்க இலாகாக்களுக்கு அதிகப் பணம் செலவிடப்படுவதாகவும் ஆனல் விபரங்கள் பட்ஜெட்டில் குறிக்கப்படவில்லையென்றும் அரசாங்க பண்ணைகள் முதலியனவற்றின் கணக்கு விபரங்கள் குறிப்பிடப்படவில்லையென்றும் தேசத்தில் உணவு உற்பத்தி இயக்கத்தில் அதிக அதிகாரிகள் இருப்பினும் பிரயோஜனமான வேலைகள் ஒன்றும் அவர்களால் செய்யப்படவில்லையென்றும் கூறினர்.

இத்தருணத்தில் மாலை 4 மணியானதால் மேற்கொண்டு சபை நடவடிக்கையை திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணிவரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

பாராளுமன்ற கமிட்டிகள் நியமனம்

தெரிவுக் கமிட்டியின் சிபார்சுகள்

கொழும்பு, டிச. 6

பாராளுமன்றம் நேற்று கூடியபோது சபாநாயகர் கீழ்க்கண்ட கமிட்டிகளை சபை நடவடிக்கை விதிப்படி நியமித்துள்ளதாகத் தெரிவித்தார்.

சபை நடவடிக்கை 123-வது விதிப்படி திரு எஸ. அபய விக்கிரமா, மேஜர் ஜே. டபிள்யூ ஒல்ட்பீல்ட், ஸ்ரீமதி புளோரன்ஸ சேனநாயகா, திரு ஏ எல். தம்பியையா ஆகியோர் சபைக் கமிட்டிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

சபை நடவடிக்கை 124-வது விதியின்படி திரு டட்லி சேனநாயகா திரு ஜி ஜி. பொன்னம்பலம், திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன, டாக்டர் என் எம் பெரேரா ஆகியோர் நிரந்தர சபைக் கமிட்டிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்,

சபை நடவடிக்கை 125-வது விதிப்படி திருவாளர்கள்: டபிள்யூ. தஹநாயகா, கே சனகரத்தினம், பி ஜி. பி. கெனமன், வி. டி. நாணயக்காரா, ஏ. ஈ பீரிஸ். எச். ஆர். யு. பிரேமசந்திரா, டி. பி. சுபசிங்கா ஆகியோர் பொதுக் கணக்கு கமிட்டிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்

சபை நடவடிக்கை 126-வது விதிப்படி திருவாளர்கள்: ஏ. எம். அபூபக்கர், என். எச் கீர்த்திரத்ன, ஜி. ஆர். மோத்தா, டி. பி. பனபொக்கே. எம். சேனநாயகா ஆகியோர் பொதுஜன மனுக் கமிட்டியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்ட நிரந்தரக் கமிட்டிபற்றி இச்சபைக்கு எவ்வித சிபார்சும் இப்பொழுது செய்யப்படவில்லை. மேற்கண்ட தெரிவுகளை தெரிவுக் கமிட்டியே தெரிந்துள்ளது.

பர்மா பிரதம மந்திரி கொலைவழக்கு

தனக்கு ஒன்றும் தெரியாதாம்

ரங்கூன், டிச. 4

பர்மா மந்திரி சபையார் எழுவரைச் சுட்டுக் கொன்ற வழக்கில் எதிரிகளிலொருவரான மவுங் சூஇப்போது தங்களுக்கெதிராக வழக்காளி சார்பாகச் சாட்சியமளிக்கும் பா நியூன் என்னும் முந்திய எதிரி போலிஸாரின் பலாத்காரத்தின் பேரில்தான் தங்களுக்கெதிராகச் சாட்சியம் கூறினுரென்றும் போலிஸார் தன்னை எவ்வளவோ சித்திரவதை செய்தும்தான் அவர்களுக்கு எவ்வகையான வாய் முறைப்பாடும் சொல்ல மறுத்து விட்டாராம்,

மவுங் சூவுக்கு வயது 42, இவரும் யுத்தகதுக்கு முந்தி பர்மா பிரதம மந்திரியாகிய யூகோவும் இன்னும் வேறு எழுவரும்தான் எதிரிகள்.

மவுங் சூ தனக்கு இவ்வழக்கில் யாதொன்றும் தெரியாதென மறுத்து விட்டார். கொலை நடந்த தினத்தில் யூகோ வீட்டில் பிடித்தடைபட்ட மவுங சூதான் மந்திரிசபையுள் நுழைந்து சுட்ட துவக்குக் காரரின் தலைவரெனக் கூறப்படுகிறது

லண்டனில் இலங்கை தமிழர் கூட்டம்

படமாகக் காட்டப்படும்

கொழும்பு, டிச. 6

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கூடிக் குலைந்த தமிழர் கூட்டம் படமபிடிபட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஜிந்துப்பிட்டியாவில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
மாஸ்டர் வித்தால், மிஸ் ஜெனவாபவர்
மற்றும் பலர் நடிக்கும்
"ஆசியாவின் நட்சத்திரம்"
என்ற சிறந்த பேசும் படக்காட்சி காட்டப்படும்

சந்திரா பீடி
CHANDRA BEEDI
சந்திரா பீடி
M.R. SIVARAM & CO.,
604, B, NEW TOWN MADAMPE.
C.A.P.Co.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால்
வைத்தியரை! அணுகத் தேவையில்லை!
புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள்
கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.
உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம்
பெற்றுக்கொள்ளுங்கள்.
கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே
எங்கள் பந்தோபஸ்தான அறைகளில்
அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி
சேகரிக்கப்படுகின்றது.
ஜி. ஸி. ரேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜா,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் நிரம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

பீடிச் சக்கரவர்த்தி.
த.பி.
சொக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரிங்லேபில்
சொக்கலால் ராம் சேட்
த.பி. சொக்கலால்

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, கட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.